# தென்மொழி


## மாவீரர் நாளிலே, மலர்க தமிழீழமே!

மாவீரர் நாளிது! மாவீரர் நாளிது!
மக்கள் உரிமைகள் மலர்கின்ற நாளிது!

தமிழீழப் புலிகள் தாயகம் மீட்டிட
உமிழ்ந்த — உமிழ்கின்ற உயிர்களை வணங்கிடும்
மாவீரர் நாளிது! மாவீரர் நாளிது!
மக்கள் உரிமைகள் மலர்கின்ற நாளிது!

நாவீரம் பேசிடும் அரசியல் நடிகர்கள்,
மக்களை நசுக்கிடும் நயவஞ்சக் கொலைஞர்கள்,
காவி உடையணி புத்த பிக்குகள்,
கயமை மலிந்திடும் சிங்களக் காடையர்

மேவுமிக் கொடியரை மிதித்துப் போர்செய்து,
மின்னுல கெய்திய தமிழீழ இளைஞரின்
இன்னுயி ரெல்லாம் எழுச்சியாய் விளைகின்ற
மாவீரர் நாளிது! மாவீரர் நாளிது!
மக்கள் உரிமைகள் மலர்கின்ற நாளிது!

உடல்களை விதைகளாய், உணர்வை உரங்களாய்,
விடலையர் குருதியே வீழுசெம் புனலாய்—
விதைத்தனர் வீரம், வேளாண்மை நடந்தது!
கதைத்த தமிழீழக் கருத்துகள் விளைந்தன!

மாவீரர் நாளிது; மாவீரர் நாளிது!
ஆவிகள் மகிழ்கின்ற அருமை நாளிது!
மாவீரர் நாளிலே, மலர்க தமிழ் ஈழமே!

(ஒவ்வொரு நவம்பர் 21 முதல் 27 முடியவுள்ள ஏழு நாள்களும் தமிழீழத்திற்காக உயிரீகம் செய்த மாவீரர் நாள்களாகக் கொண்டாடப் பெறுகின்றன; நவம்பர் 27 உலகத் தமிழினத் தளபதி மாவீரன் பிரபாகரன் பிறந்த நாள்!)
(மின்னுலகு—புகழ் உலகு; ஆவிகள்—மறைந்த மாவீரர் உயிர்கள்.)


ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 25
ஓலை : 11

விலை:
உருபா : 2-00

# நமக்கு வந்த மடல்கள்.

O : *1428* : அன்புச் செம்மல்! தமிழ்த் தென்றல்! வணக்கம். சுவடி: 25; ஒலை 10 ஆம் 'தென்மொழி'யின் 'உள்ளச் சிதைவுகள்' தமிழகத்தின் தற்காலக் கண்ணாடியாகத் தோன்றினாலும், மொழி, இனம், நாடு மூன்றையும் உயர்த்த உறுதி பூண்டு செயலாற்றும் தமிழ்த் தோன்றலாகிய தாங்கள், 'திக்கறியா நெடுங்கடலுள் சிறு புயல் சுழல் மணலாய்ச்' சிதையாமல், உலக இருளை நீக்கும் தோன்றலாக—கதிரவனாக—விளங்கவே வேண்டுகிறேன். பகலவன் முன் பணியாகத் தங்கள் தலைமைச் செயல்திறனால், எல்லாக் குறுக்கீடுகளும் நீங்கிச் செந்தமிழ் மொழி, இனம் நாடு உயர்ந்து விளக்கமாவது திண்ணம். அன்புடன்,
வழக்குரைஞர்,-புலவர் கோ.உள்ஒளி. அறி.இ.ச.இ.திருப்பத்தூர்,

O : *1429* : பேரன்புடையீர், வணக்கம். ஊர் தோறும் உலாவந்து அறிவுச் சுடர் ஏற்றுகிற தங்களின் 'தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நில'மாகிய இதழ்களைப் பேராசிரியர்கள் சொல்லக் கேட்டுக் கிளர்ந்து போனேன். தங்களின் தூய தொண்டும், தமிழ்ப் பணியும், பாராட்டுக்குரியன. உங்களைப்போல் ஓரிருவர் பற்றிக் கேள்வியுறும் போதெல்லாம் தமிழ் வாழும்—வளரும் என்கிற சாவாத உண்மை உயிர் வாழ்கிறது. நன்றி.

—எசு.விசயகுமார், புதுக்கோட்டை.

O : *1430* : அன்பார்ந்த ஐயா வணக்கம்.

அன்பிலே மழைத் தண்ணீர்; அறிவிலே பெருநெருப்பு;
ஆற்றலில் சூறைக் காற்று!—உளத்
தென்பிலே மாமாலை; தெளிவிலே நீர்நிலை;
திரிதலில் வானப்பறவை!'' என்றெழுதிய கை—''தோள் அழுந்தத் தளர்கின்றேனே! குமைகின்றேனே! சிதைகின்றேனே!'' (25:10) என்று எழுதுவது கண்டு வருந்தினேன். வியப்படைகின்றேன். எச் சூழ் நிலையிலும் தளர்வுறாமல் ''திட்டமுடன் இயங்குவேன் தீர முடிவெய்துவேன்'' எனப் புத்துணர்ச்சியுடன் பணியாற்றுமாறு வேண்டுகிறேன். தமிழ்நாட்டில் முறையான முனைப்பான தனித் தமிழியக்கத்தைத் தொடங்கி நடத்துதல் தங்களின் தலையாய கடன். அதைப் புறக்கணிக்க வேண்டா! இடுக்கண் வருங்கால் நகுக! இயங்குக! என் துணை உண்டு!

அன்புடன், —க.தமிழமல்லன், புதுச்சேரி-9

O : *1431* : என் உயிருக்கும் மேலான ஐயா, வணக்கம். என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத மிகச் சிறந்த விழாவில் 20-5-90-இல், சங்கரநாயினார் கோவிலில் கலந்து கொண்டு, மிக மகிழ்ச்சியோடு வந்து சேர்ந்தேன். தமிழின் மிக ஆழமான தங்களுடைய அறிவியல் பார்வையின் பேச்சைக் கேட்டு, என் உயிரை வளர்த்துக் கொண்டேன். மிகக் கடுமையான இயற்றமிழ் வரலாற்றை, அங்கு வந்திருந்தோர் கேட்டு நுகரும்படி பேசினீர்களே! அதைக் கேட்டு நான் எண்ணி எண்ணி வியப்படைந்தேன். இந்நாள் வரை இவ் வகையான தமிழ்ப் பேச்சை எவரும் பேசியது இல்லை; பேசவும் முடியாது. பெரும்பாலானவர் தமிழால் வாழ்ந்தனர். தமிழ் வளரவில்லை. உங்களால் தமிழ் வளர்கிறது.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ திருவணம் தி. பி. 1990 (1959) ]



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் நிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: (847829)

சுவடி: 25] தி.பி. ௨௦௨௧ துலை—நளி (நவம்-திசம் 90') [ஓலை: 11

## விளைவு எங்கே? வீரம் எங்கே?



—திரைப்படமும் அரசியலும் மக்களிரு
தினவுகளாய்த் திரட்சி பெற்றே
இரைப்பைக்கும் நெஞ்சுக்கும் ஏற்றஇரு
உணவுகளாய் எந்நேரத்தும்,
உரைப்பதுவும் எழுதுவதும் உணருவதும்
அவ்வுணர்வாய் உழன்று மூன்றே,
வரைப்பின்றி மதிமயங்கும் மக்களிடைத்
தமிழுணர்வு வளர்ப்ப தெங்கே?

அடிமையராய் அறியாமை மிக்கவராய்
அழிவுமத, சாதிச் சேற்றில்
மிடிமையராய் உள்ளழுந்தி மூழ்குகின்ற
மக்களினை மீட்ப தெங்கே?
குடிமைநலம் பேசியராய் அன்னவரைக்
கொள்ளையிட்டுச் சுரண்டி வாழும்
கொடியவராம் அரசியல்செய் கூத்தாட்டக்
கயவர்களும் குறைவ தெங்கே?

மன நலத்தைச் சிதைக்கின்ற மதி நலத்தைக்
குறைக்கின்ற மலிவுப் பேச்சு!
இன நலத்தை வளர்க்காத, நாட்டுநலம்
பேணாத இழிசெயல்கள்!
புனை நலத்தை உண்மையென்று, புளுகுரையை
மெய்யென்று, புகழுக் காக
வினை நலத்தைக் கெடுக்கின்ற வீணர்களுக்
கிடையில் இனம் விடிவ தெங்கே?

கிளர்ந்துவரும் கழிகாமத் திரைப்படத்தில்
கலைகளெனும் கயமைச் சேற்றில்
வளர்ந்துவரும் இளைஞரெலாம் மதிமயங்கி,
மனம்கெட்டு, மானம் இன்றித்
தளர்ந்துவரும் தன்மானம் அறக்கழிய
உடல் கெட்டுத் தாழ்ச்சி யுற்றார்!
விளர்ந்துவர வேண்டியநல் உணர்வெல்லாம்
விட்டவர்கள் விழிப்ப தெங்கே?

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்
படர்கின்ற தமிழ்நி லத்தில்
நல்வகையாய் உணர்வெழுதி மறம்பேசி
நல்வினைவை நாட்டு தற்குள்
அல்வினைவே வளர்ந்துவர அவ்வினைவில்
குளிர்காய்ந்தே அறத்தைக் கொன்றே
வல்கரவால் பொருள்செய்து குடல்நிரப்பும்
வன்னெஞ்சர் வீழ்வ தெங்கே?

தொய்யாத நல்லுளமும் வல்லுணர்வும்
கொண்டுவிழி மூடல் இன்றிச்
செய்யாத பெரு முயற்சி செய்தேநம்
செந்தமிழும் இனமும் நாடும்
பொய்யாத முன்னேற்றம் உரிமை நலம்
பொலிந்திடவே உழைக்கும் போது
எய்யாத பழிச்சொல்லும் முதுகம்பும்
எய்பவர்கள் இளைப்ப தெங்கே?

இருந்தாலும் நம்கடமை செயல்வேண்டும்
எந்தமிழை மீட்க வேண்டும்!
திருந்தாத நம்மினத்தைத் தெளிவிக்க
வேண்டும்; அதைத் திருத்தல் வேண்டும்!
வருந்தாத வருத்தங்கள் வந்தாலும்
நம்நிலத்தை மீட்டல் வேண்டும்!
பொருந்தாதார் புறம் பெயர்க! வன்தொண்டர்
புறப்படுக! வீரம் எங்கே?

# தென்மொழி அன்பர்களே!
# உங்களை வரலாற்றில் இணைத்துக் கொள்ளுங்கள்!

பேரன்பின் இனிய தமிழ் நெஞ்சங்களே!

'தென்மொழி ஓர் இதழன்று; ஓர் இயக்கம்' என்று இதன் தொடக்கத்திலேயே எழுதியிருந்தோம். இஃது ஓர் இயக்கம் மட்டுமன்று; இஃது ஒரு வரலாறு! ஆம்! தூய தமிழ் வரலாறு. மறைமலையடிகள் காலத்தில் கருத்தாக மலர்ந்த தூயதமிழ் நெறியைப் பாவாணர் காலத்தில் ஒரு முயற்சியாக்கி, இதனை இன்று பெரும் இயக்கமாக, வரலாறாக வளர்த்து வடிவமாக்கிக் காட்டிய பெருமை தென்மொழிக்கு உண்டு.

இந்த வரலாற்றில் தென்மொழி படிக்கும் அனைவர்க்கும் பங்குண்டு; பெருமையுமுண்டு. தமிழகத்தில் நடைபெற்று வரும் பிற இதழ்கள், தாளிகைகள் போல் அல்லாமல், மொழிநடையிலும், இன முன்னேற்றத்திலும், தனித்தமிழ் நாட்டு விடுதலை முயற்சியிலும் தென்மொழி அணி,முதல் அணி! தலைப் படை! அஃதாவது தூசிப் படை!

இப் படையில் தொடக்கத்தில் பங்கேற்றவர்கள், இடையில் இணைந்து கொண்டவர்கள், இக்கால் தொடர்ந்து வருபவர்கள் எனப் பலர் உளர். தொடக்கத்தில் முடுக்கமாக நடை தொடங்கி, இடையில் சந்துகளிலும், பொந்துகளிலும் தங்களை ஒதுக்கிக் கொண்டவர்கள், கை நெகிழ்த்தவர்கள், இதன் மேல் ஏதாவது பொருந்தாமலும் பொய்யாகவும் காரணங்காட்டி விலகி நின்றவர்களும் பலர் உளர். இனி, தொடக்கத்திலிருந்து, பல்வேறு இழப்புகளையும், அழுத்தங்களையும், சுமைகளையும், இழிவு சிறப்புகளையும், புரளி பூசல்களையும் பொருட்படுத்தாமல் இன்றுவரை, இதனோடு இணைந்து வீறுநடைபோடுகிறவர்களும் பலர் உளர். இவ்வகையினர் எல்லாரும் இத் தாய்த் தமிழ்நிலத்தில் மட்டுமல்லாமல், ஐரோப்பிய நாடுகளிலும், கிழக்காசிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், இலங்கையிலும், பிற வேறு இந்திய மாநிலங்களிலும் பரவலாக வாழ்ந்து கொண்டுள்ளனர்.

இவர்களில் நேரடியாக இதன் உழைப்பிலும் ஊக்கத்திலும் பங்கு கொண்டவர்கள் பலர். மறைமுகமாக இதற்கு நீரும் எருவும் இட்ட நல்லுளத்தவர்கள் சிலர். இவர்களில் பலர் தென்மொழியைத் தொடர்ந்து படிப்பவர்கள்; பலர் இதனை வாங்கிப் பலர்க்கும் விற்றுப் பயன் தந்தவர்கள்; சிலர் வணிகர்கள்; இன்னும் சிலர் இதன் கொள்கை கோட்பாடுகளில் இணைந்து நின்று இயங்குகின்ற பேராளர்கள்; படி நிகராளியர்கள்; செயல் மறவர்கள்.

இப்படியானவர்கள், எப்படி எப்படி, எந்தெந்தக் கால கட்டங்களில், எங்கெங்கிருந்து இதன் ஏறு நடையுடன் இணைந்து நடக்கத் தொடங்கினர்கள் என்பது பல வரலாறுகளை உள்ளடக்-

கிய அருஞ்செய்தி. இவ் வரலாறுகளெல்லாம் தென்மொழியின் பெருமை வரலாற்றில் உள்ளடங்க வேண்டிய உணர்வுப்பக்கங்கள்

எனவே, இவ் வறிக்கையைக் காணும் தென்மொழி அன்பர்கள் ஒவ்வொருவரும், கீழே குறிப்பிடப் பெறும் வகையில் அவரவர்களின் தென்மொழி ஈடுபாடுகளையும், அதனொடு கொண்ட தொடர்புகளையும் சுருக்க விளக்கமாக, கால, இட நிகழ்ச்சி அடைவுகளுடன், தென்மொழிக்குத் தொடர்ந்து எழுதி விடுக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். பின்னால் தொகுக்க விருக்கும் தென்மொழி வரலாற்றை நிரப்புவதற்குரிய பக்கங்களாக அமையப் போகும் இச் செய்திகள், முன் கூட்டியே தென்மொழியில் ஒவ்வோர் இதழிலும் தொடர்ந்து வெளியிடப் பெறும்.

அவர்கள் எழுதவேண்டிய கருத்துப் புலனங்கள் இவையாக இருக்க வேண்டும்.

1. தென்மொழியை முதன் முதலாக எப்பொழுது, எங்குக் கண்டனர்; அல்லது எவரால் இவ்விதழ் அறிமுகம் செய்து வைக்கப் பெற்றது. இப்பொழுது எந்த வகையில் தொடர்பு?
2. அவ்வாறு கண்டும், பெற்றும் படித்த தென்மொழி இதழ் எது? அதன் சுவடி, ஓலை, மாத, ஆண்டு விளக்கம், (மறந்து போயிருக்க வழியில்லை; மறந்து போயிருந்தாலும் கவலைப் படாமல் தோராய விளக்கங்களைத் தந்தால் போதும்.)
3. முதன் முதல் பெற்ற தென்மொழி இதழால் எழுப்பப் பெற்ற உணர்வு நிலை, அறிவு நிலை, கொள்கை நிலை.
4. தொடர்ந்து தென்மொழியைப் படிக்க அல்லது பரப்ப எடுத்துக் கொண்ட முயற்சிகள்;
5. தென்மொழியைப் படித்ததால், அல்லது பரப்பியதால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றங்கள்; பட்ட தொல்லைகள்; இழந்த இழப்புகள் அல்லது ஊதியங்கள்.
6. தென்மொழி நடத்திய போராட்டங்களில், மாநாடுகளில், நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது, தொல்லைப் பட்டது, சிறைப்பட்டது போன்ற குறிப்புகள்.
7. தென்மொழி ஆசிரியரோடு கொண்ட, நேரிடையான, மடல் வழியான தொடர்புகள்; சிறப்புகள் முதலியன.
8. தென்மொழிக் குடும்பத் தொடர்புகள், அல்லது பிற தென்மொழி யன்பர்களின் குடும்பத் தொடர்புகள்.
9. தென்மொழியால் அவர்கள் தொடக்கத்தில் பெற்ற உணர்வு நிலைகளில், அறிவுநிலைகளில் படிப்படியாக அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்கள்; புறக்கணிப்புகள்; அல்லது கருத்து வளர்ச்சிகள்;
10. தென்மொழிக்கு அவர்கள் ஆற்றிய தொண்டு மதிப்பீடும், தென்மொழி அவர்களுக்குச் செய்த தொண்டு மதிப்பீடும்.
11. இறுதியாகத் தென்மொழிக்கு அவர்கள் கூறும் எதிர் காலத் திட்டங்கள்; அல்லது அதற்கு அவர்கள் அமைத்துக் கொடுக்க விருக்கும் முன்னேற்ற வளர்ச்சி வாய்ப்புகள்.

(தொடர்ச்சி அடுத்தப் பக்கம்)

# உறுதியினைப் பெறுவாய்!

-தமிழ்வேள்-

தள்ளத்தான் முடியாத தோள்சுமையாய்
குடும்பந்தான் தடைசெய் தாலும்
உள்ளத்தால் நலிந்தாலும் உடலதனால்
மெலிந்தாலும் ஓய்தல் இன்றி
கள்ளத்தால் வினைசெய்யும் கரவுடையார்
செயலாலும் கலக்கம் இன்றிப்
பள்ளத்தில் உள்ளோர்க்குப் பணிசெய்ய
உறுதியினைப் பெறுவாய் நெஞ்சே!

அறிஞர்களைப் பேணாமல் ஆணவத்தோ(டு)
ஆட்சிசெயும் அமைச்சர் என்போர்
வறிஞர்களாய் உழைப்பவர்கள் வாக்களித்த
விளைவதனால் வந்தோர் தாமே!
வெறிஞரென அவரைப்போய் வைவதனால்
என்னபயன்? வெதும்பல் இன்றி
வறிஞர்களை அறிஞர்களாய் உயர்த்திடவே
உறுதியினைக் கொள்வாய் நெஞ்சே!

மக்களெலாம் வழிமாறி மாண்பிழந்தார்
என்றெண்ணி மனஞ்சோ ராமல்
வக்கற்ற ஏழையரை வலியவராய்
மாற்றுதற்கோர் வழியைக் கண்டே,
தக்கபடி அன்னவர்தாம் தகும்வழியில்
நடந்திடவே தொண்டு செய்தே,
சிக்கலினைக் கண்டஞ்சி சிதையாமல்
உறுதியுடன் செல்வாய் நெஞ்சே!

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

—இப் பதினொரு தலைப்புகளுக்கும் ஆன விடைகளை விளக்கங்களைப் படிக்கச் சுவைதரும் வகையில், கட்டுரை வடிவில் எழுதியனுப்பும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். கட்டுரைகளுடன் அன்பர்கள் தங்கள் முழு முகவரிகளையும் தருதல் வேண்டும். படம் இருப்பின் (எல்லைக் கடவு (Pass port) அளவு) அனுப்பி வைப்பதும் வரவேற்கத் தக்கது. குறைந்த அளவு ஆயிரம் அன்பர்களின் கருத்துகளாகிலும் இவ் வரலாற்றுப் பகுதியில் இடம் பெறுதல் வேண்டும் என்று விரும்புகிறோம். கட்டுரைகளை அவை அனுப்பப் பெறும் உறைகளின் மேல் பகுதியில், 'தென்மொழி அன்பர் வரலாறு' என்னும் உரைக் குறிப்புடன் 'ஆசிரியர், தென்மொழி, சென்னை-5' என்னும் முகவரியுடன் எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

1-12-90 — ஆசிரியர்
சென்னை-5 — தென்மொழி

(பி.கு- படம் அனுப்புபவர்கள் அதன் படக்கட்டைச் செலவுக்கு மட்டும் உரு.பத்து மட்டும் பணவிடை வழி அனுப்பித் தரக் கேட்டுக் கொள்கிறோம்)

# தென்மொழியின் இரங்கல்கள்!

## 1. பெரியவர் தனராசு சரவய்யா மறைவு!

தொடக்க நாளிலிருந்து தென்மொழியின் தொண்டுக்குத் தோள் கொடுத்துத் தாங்கியவரும் இன்றும அதற்குத் தோன்றாத் துணையாக நிற்பவரும், அதன் கொள்கைகளை மேலை நாடுகளி-லெல்லாம் பரப்பி வருகிறவரும், நம் உலகத் தமிழின முன்-னேற்றக்கழகத்தின் பிரான்சுக் கிளை அமைப்பாளரும், ஆசிரியரின் ஐரோப்பியச் சுற்றுச் செலவை முன்னின்று அமைத்தவரும், நம் ஆசிரியர் குடும்பப் புரப்பாளரும் ஆகிய, உரிமைத் திரு. அரிமா வளங்கோ அவர்களின் அருமைத் தந்தையாரும், ஆசிரியர் முயற்சிகளிலும், அவர் செயற்பாடுகளிலும் அளவிறந்த மதிப்புடையவரும் ஆதரவாளரும், 108 அகவை முதிர்ந்த பெரிய-வரும் ஆகிய பெருமைக் குரிய தனராசு சரவய்யா அவர்கள், கடந்த 27-10-90 அன்று பிரான்சில், மறைவெய்தியது கேட்டுத் தென்மொழியும் தென்மொழிக் குடும்பமும் பெருவருத்தமும் பெயராத் துன்பமும் எய்தினார்கள். பெரியவர் தனராசு சரவய்யா அவர்கள் ஆசிரியர் மேல் வைத்த அளவு கடந்த அன்பிற்கும் மதிப்பிற்கும் எடுத்துக்காட்டாக, அவர் மறைவதற்கு முன்னர், ஆசிரியர் ஐரோப்பிய சுற்றுச் செலவில் பதிவு செய்த ஒலி, ஒளி-யிழை நாடாக்களின் பதிவைப் பலமுறை போட்டுப் போட்டுப் பார்த்தும் கேட்டும் மிகவும் சுவைத்து மகிழ்ந்திருக்கிறார்கள்— என்று அருமைத் தம்பி அரிமா வளங்கோ அவர்கள் பெருமை-யுடனும், வருத்த மகிழ்ச்சியுடனும், தென்மொழிக்கு எழுதியிருந்-தார்கள். பெரியவர் சரவய்யா அவர்களின் மறைவால், ஆராத் துயருற்றிருக்கும் அருமைத் தம்பி அரிமா வளங்கோ விற்கும், அவரின் உடன் பிறப்புகளுக்கும், அவர் குடும்பத்தினர்க்கும், அருமை நண்பர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், ஆசிரியரும் தென்மொழிக் குடும்பத்தினரும், தங்கள் ஆழ்ந்த வருத்தத்தை-யும், நெஞ்சு அளாவிய இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்கின்ற-னர். பெரியவர் திரு. தனராசு சரவய்யா அவர்களின் ஆதன், பெயராப் பேரியற்கையில் அமைதியுறுவதாகுக!

## 2. பாம்பூர்ப் பெரியவர் அறிஞர் முத்துக்குமரனார் மறைவு!

தொடக்கக் காலத்திருந்து தென்மொழி வளர்ச்சியிலும் அதைப் பரப்புதலிலும் பேரன்பும் பேரார்வமும், பேரக்கறையும் கொண்-டிருந்தவரும், ஆசிரியரின் உலகியல் நூறு, நூறாசிரியம், பாவியக்-கொத்து முதலிய அரிய அறிவிலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரும், மொழி ஞாயிறு பாவாணரின் மேலும் ஆசிரியர் பாவலரேறுவின் பாலும் அளவிறந்த பற்றும் மதிப்பும் கொண்டவரும், 80 அகவையுடையவரும், அஞ்சல் துறைத் துணைக் கண்காணிப்பாளராகவிருந்து ஓய்வு பெற்றவரும், ஆசிரியரின் பேரன்பிற்கும் பெருமதிப்புக்கும் உரியவரும், தமிழிலும் ஆங்கிலத்திலும் நற்றிறமும், சொற்றிறமும் மிகு புலமையும் பெற்றவரும் ஆகிய, பாம்பூர்ப் பெரியவர் திரு. த. முத்துக்-குமரனார் அவர்கள், கடந்த 12-11-90 இல் மதுரையில் மறைவுற்ற

செய்தியறிந்து பேரதிர்ச்சியும் பெருந் துயரமும் கொண்டோம். ஆசிரியர் குடும்பத்துடனும் உறவு கொண்டிருந்த அவரின் பண்புப்பான்மையை நினைந்து ஆசிரியர் குடும்பமும் பெருந்துன்பமுற்றது.

அன்னார் மறைவைப் பொருது, நம் அறிஞர். பறம்பை அறிவனார் அவரைச், ''சால்பு விடாத் தமிழ்ச் சந்தனம்'' என்றும், ''எண்பதில் மறைந்தாலும், நீ,என்றும் தமிழ்ப் பாவலரேறுவின் பாவியத்தில் வாழ்கின்றீர்!'' என்றும் ''கை நடுங்கும் போதும் தூவல் பற்றித், தமிழ்க் கனலெழுத்தை உள்வாங்கி, அரியதாம் ஆங்கில நடையில் ஆர் உம் போல் ஆக்க வல்லார்?'' என்றும், ''உம் எழுத்தெண்ணிப் பண்பெண்ணிச் செப்பகுதி நேரமெல்லாம் செய லெண்ணி வாழ்ந்திருக்க எங்கு நான் கற்பேனோ?'' என்றும் ஒப்பாரி வைத்துப் பதறுகிறார்.

பாம்பூர்ப் பெரியவரை இழந்து கையற்று நிற்கும் அவரின் அன்புத் துணைவியாம் முதிய அன்னைக்கும், அவரின் அருமை நண்பர்களுக்கும் ,அவரையறிந்த தென்மொழி நெஞ்சங்கட்கும், அவர் உற்றார் உறவுக்கும், தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலையும் அலமந்த வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. தமிழ்த்தாயின் இயற்கை மடியில் அப் பெருமை மிகு செந்தமிழ் நெஞ்சம் அமைதியுற்றுத் தவழ்ந்து மகிழுமாக!

### 3. விழுப்பரையனார் அன்புத்துணைவி மறைவு!

தொடக்க நாள் முதல் இன்று வரை தென்மொழியின் மாறாத கொள்கைத் தொண்டரும், உ.த.மு.க. செயல் மறவரும், ஆகிய விழுப்புரம், விழுப்பரையனார் அன்புத் துணைவி எழிற்குமரி, கடந்த 9-10-90 அன்று எதிர்பாராமல் மறைவெய்திய செய்தி மனத்தைப் பிழிந்தது. அதன் நினைவேந்தல் நிகழ்ச்சியும் படத்திறப்பும் கடந்த 21-10-90-இல் அ.நக்கீரன் தலைமையில், நடைபெற்றது. தஞ்சைப் பல்கலைக் கழகச் சொல்லாய்வறிஞர், ப. அருளி அவர்கள் அம்மையார் படத்தைத் திறப்புச் செய்து, அரிய நினைவுப் பொழிவு செய்தார்கள். மூர்த்திஐயா, பா. பழநியப்பன், தாமரைக்கோ, தேன்மொழி அருளி மற்றும் பலர் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இரங்கலுரை நிகழ்த்தினார்கள். தென்மொழியும் தன் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் விழுப்பரையனார் அவர்களுக்கும் குடும்பத்தார்க்கும் தெரிவித்துக் கொள்கிறது.

### 4. அறவாழி அன்னையார்க் கிரங்கல்!

நெடுநாளைய தென்மொழி அன்பரும், கொள்கை குன்றா உரத்தினரும் ஆகிய நெய்வேலி மு. அறவாழி தமிழரசி அவர்களின் அன்னையார் மு. பழனியம்மாள் அவர்கள் கடந்த 7-10-90-இல் சேலம் மாவட்டம், பொன்னுரம் பட்டியில் காலமான செய்தியறிந்து வருந்தினோம். அவர் பிரிவால் வாடும் அனைத்து உறவு நெஞ்சங்களுக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. ○

# போர்க்களிற்றின் உருவர்!

புலவர் வெற்றியழகன்:-

பொத்தகத்தை விரித்துவைத்த புதுமையைப்போல் மீசை;
பூந்தமிழின் மீதினிலே தணியாத ஆசை!
செத்தவரை எழுப்புகின்ற சாட்டையடிப் பாடல்;
செந்தமிழைப் பழிப்போர்கள் கேட்டாலே ஓடல்!
முத்தமிழின் பொருளைப்போல் பரந்திருக்கும் நெற்றி;
முன்னேற்றம் தமிழர்க்கே இவர்பாட்டின் வெற்றி!
இத்தரையைக் கிழிக்கின்ற இடியைப்போல் பாட்டு;
இன்றமிழின் பகைவர்க்கு வைக்கின்ற வேட்டு!

வீரத்தைக் கொப்புளிக்கும் விழியிரண்டின் தோற்றம்;
வீரமன்னன் பாண்டியனின் வடிவினிலே மாற்றம்!
சேரமன்னன் குட்டுவனை உரித்துவைத்த காட்சி;
சோழனையே காணுகின்ற சொல்லவொணு மாட்சி!
பாரதிர முழங்குகின்ற பெருமுரசுத் தொண்டை;
பார்வையிலே தவறுபடின் வீசிடுவார் குண்டை!
யாரெவர்தாம் ஆனாலும் அஞ்சமாட்டார் என்றும்;
அணுசினந்தால் தூளாகும் பகையென்னுங் குன்றம்!

போர்க்களத்தில் வீசுகின்ற வாளைப்போல் புருவம்;
பகைவர்களைக் கொன்றுவந்த போர்க்களிற்றின் உருவம்!
வார்த்தெடுத்த பொற்சிலைக்குள் வண்டமிழின் பதிகம்;
வடித்தளித்த பாட்டைவிடத் தன்மானம் அதிகம்!
சீர்த்திமிக்க தமிழர்களை நிமிரவைக்குந் துணிவு;
சிறுஅளவும் கொள்ளவில்லை பாவேந்தர் பணிவு!
பார்த்தாலே தீமைகளை நீறுக்கும் விழிகள்;
பள்ளத்தில் வீழ்தமிழர் பற்றிவரும் மொழிகள்!

தமிழ்க்கோட்டை மதிலரணுய்ச் செம்மாந்த நோக்கு!
தட்டிநம்மை எழுப்புகின்ற பாடல்களின் போக்கு;
சுமையெல்லாந் தாங்குகின்ற எஃகினைப்போல் நெஞ்சம்;
சூறுவளிப் பாட்டினிலும் தமிழழகே கொஞ்சும்!
தமிழ்வளமே கரைபுரண்டு வழிகின்ற வெள்ளம்;
தாயைப்போல் தாங்குகின்ற மிகப்பெரிய உள்ளம்!
தூமியேனுந் தமிழ்க்கிழிவைத் தாங்காத பூட்கை;
தூய்மையினைத் தமிழரிடம் காணுகின்ற வேட்கை!

மாவேந்திக் காலமெலாம் மடங்கலென வாழ்ந்தோன்;
மறத்தமிழன் வாழ்வுயர்த்துஞ் சிந்தனையில் ஆழ்ந்தோன்!
சாவேந்திப் போகாத வரலாற்றைக் கொண்டோன்;
செந்தமிழுக்குப் பாவேந்தன் மிகச்சிறந்த தொண்டோன்!
நாவேந்தி நாடெல்லாம் பகுத்தறிவைச் சொல்வோம்;
நற்றமிழர் அனைவரையுஞ் சுற்றமெனப் புல்வோம்!
பாவேந்தர் நூற்றுண்டில் அவர்வழியைக் கொள்வோம்;
பகைமுடித்து ஒற்றுமையாய்ப் பாரதனை வெல்வோம்!

# தொல்காப்பியம்!

உரைப் பெரும்புலவர். சந்திர. பாலசுந்தரனார்.

(இதழாசிரியர் குறிப்பு; கீழ்வரும் இப் பகுதியைச் சென்ற இதழில் வெளிவந்த தொடர்-4-க்கு முன்னர் இணைத்துப் படிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.)

தொல்காப்பியன் என்னும் பெயர் குடிப்பெயர் என்றும் குலமுன்னோனின் பெயர் என்றும், ஊரினடியாகப் பிறந்த பெயர் என்றும், இயற்பெயர் என்றும், பெற்றோர் ஒரு காரணம் கருதி-யிட்ட பெயர் என்றும், இந்நூலான் வந்த பெயர் என்றும் கூறி ஆய்வாளரும் உரையாளரும் ஒருவரை ஒருவர் ஒட்டியும் வெட்டி-யும் விளங்கம் தந்துள்ளனர். காப்பியம் என்னும் பெயர் இவர் காலத்தில் சிலருக்கிருந்தமையின் இவர் அவர்களின் முற்பட்டவர் என உணரத் 'தொல்' என்னும் அடை கொடுத்து வழங்கலாயிற்-றெனக் கூறினாரும் உண்டு.

இந்நூல் இயற்றிய பின்னரே இவ் வாசிரியர்க்கு இப் பெய-ராயிற்று என்பது நன்கு விளங்குமுகத்தான் இந்நூல் அரங்கேறிய காலத்து உடனிருந்து யாவற்றையும் உணர்ந்த பனம்பாரனார் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி' என உரைத்தார்.

'தன்பெயர் தோற்றி' என்பதற்கு நூற்பெயரைத் தோற்று-வித் தென்பார் வெள்ளைவாரணனார்; அவ்வாறாயின் 'அதன்' பெயர் தோற்றி என விளங்கக் கூறியிருப்பார் பனம்பரானார். இதனை ஒருவாறு கருதிய நச்சினார்க்கினியர் இவருடைய இயற்-பெயர் திரணதூமாக்கினி என்று கூறினார். எனினும் 'பழைய காப்பியக் குடியினுள்ளோன்' என்றே உரை கூறினார். தொல்-காப்பியம் என்பதற்குத் தொன்மையான காவியம் எனப் பலர் கருத்துக் கொண்டனர். இலக்கண நூலைக் காவியம் என்றல் வடமொழியினும் மரபு இல்லை. எனவே அது பொருந்துதற்-கில்லை.

...கடைச் சங்க நூல்களுள் சில புலவர் தம் பெயர் காப்பியன் எனக் காணப் பெறுவதும். காப்பியாறு என்னும் ஓர் ஊர் காணப்பெறுவதும், இடைக்காலக் கல்வெட்டுகளில் சிலருக்கு இப்பெயர் காணப் பெறுவதுமேயாம்.

...தமிழகத்தில் வழங்கும் காப்பியன் என்னும் பெயர்க்கும் வடமொழியில் வழங்கும் காவியம் என்னும் பெயர்க்கும் உறவு உள்ளதாகக் கொண்ட மயக்கம் இத்திரிபுக்குக் காரணம். காப்பு என்பது காவல் என்னும் பொருளுடைய தொழிற் பெயராதலின் நாடு காக்கும் காவலனுக்குத் துணையாக அவனைக் காக்கும் உரிமை பூண்டொழுகிய மாவீரர்களுக்குக் காப்பவன் என நின்ற வினையாலணையும் பெயர்கள் பெயர்த்தன்மை அடையும் போது காப்பியன் என வருதல் சொல்லாக்க மரபிற்கு ஒத்ததே. அம்-

முறையில் வந்தனவே காப்பியக்குடி, காப்பியர், காப்பியார், காப்பியாரூர் என்பனவாகும். காப்பியாரூர் என்பதன் பொருள் புலப்படாத நிலையில் அது காப்பியாற்றூர் என்று திரிந்து காப்பியாறு என வழங்கியிருத்தல் வேண்டும். காப்பாகச் செல்லும் ஆறு காப்பியாறு என வந்ததாகவும் கொள்ளலாம்....

...வடவாரியர் சிலர் மிகப் பழங்காலத்திலேயே தமிழகத்தில் குடியேறித் தமிழறிஞர்களுடன் இணைந்து வாழ்ந்தனர் என்பதில் ஐயமில்லை. அவர்கள் தமிழைப் பயிலவும் வடமொழியைப் பயிற்றவும் சங்கத்தார் துணையோடும் வேந்தன் ஆதரவோடும் மதிப்பாக வாழ்ந்தனர் எனக் கொள்வதிலும் குறை ஒன்றுமில்லை. ஐந்திரம் போன்ற பெருநூல்கள் தமிழகததில் தோன்றவும் அவை வடக்கின்கண் வாழ்ந்த நூலோர்க்குப் பயன்படவும் இக்கூட்டுறவும் ஒருமைப்பாடுமே காரணம் எனலாம். எழுத்தும் சொல்லும் பொருளும் பற்றிய இலக்கண மரபுகளை ஒரு சேரத் தொகுத்துச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறும் இலக்கண நூல் தொல்காப்பியத்திற்கு முன் இருந்ததாகத் தெரியவில்லை. பின்னரும் தோன்றவில்லை.

தொல்காப்பியத்துக்கு முன்னிருந்த நூல்கள் தமிழ் இலக்கணப் பிரிவுகளுள் ஒவ்வொன்றையும் பற்றி மிக விரிவாகவும், உணர்தற்கு அரிதாகவும் இருந்தமையின் அவற்றுள் இயற்றமிழை ஒரு சேரவும் எளிதாகவும் உணர்ந்து தமிழ் மரபுகளைப் பேணிக் காக்கும் திறல் மக்களிடையே குறையத் தொடங்கியமை கண்டு, தனது பேரருள் காரணமாக, இதனை இதனால் இவ்வாறு செய்யவேண்டுமென்று நன்கு சிந்தித்து, இந்நூலைத் தமிழ் மரபு-மரபுகளுக்கு ஒரு காப்பாக இயம்பித் தொல்காப்பியம் என்னும் பெயரிட்டு இவ்வாசிரியன் வழங்கினமையை ஓர்ந்து பனம்பாரனார், தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப் பல்புகழ் நிறுத்த படிமையோன் என எடுத்துக் கூறினர் என்க. இப் பேரருள் திறமே பல்புகழுள் தலையாயது எனலாம்.

இனி, இப் பாயிரத்துள் 'தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி' என்றதனன், ஆக்கியோன் பெயரும் நூற்பெயரும் பெறப்பட்டன.

'ஐந்திறம் நிறைந்த' என்றதனல், நூலாசிரியன் அறிவும் ஆற்றலும்,

'பல்புகழ் நிறுத்த படிமையோன்' என்றதனல், தகுதியும் சால்பும் பெறப்பட்டன.

'செந்தமிழ் இயற்கை சிவனிய நிலத்தொடு' என்றதனல், வழியும்,

'புலந்தொகுத்தோனே' என்றதனல், வழியினது வகையும்,

'வடவேங்கடம் தென்குமரி' என்றதனல் நில எல்லையும்,

'முறைப்பட எண்ணி',—என்றதனலும் 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' என்றதனலும், யாப்பும் காரணமும், பயனும்,

'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின், எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' என்றதனல் நுதலிய பொருளும், 'அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து' என்றதனல், கேட்டோரும் அவைக்களமும், 'நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து' என்றதனல், காலமும் பெறப்பட்டன.

(இதழாசிரியர் குறிப்பு: கீழ்வரும் இப் பகுதியையும் அதன் தொடர்ச்சியையும். சென்ற இதழில் வெளிவந்த தொடர்—4-க்குப் பின்னர் இணைத்துப் படிக்க.)

பெயர்ப் பொருள் தன்னானும் பிறிதானும் கொள்ளும் வினைநிலை காரணமாக எய்தும் வேறுபாடுகளே வேற்றுமையாகும். அவ்வேறுபாடுகளை எட்டுவகையாக அமைத்துக் கொண்டனர். தமிழ்நூலார்.

...இவ் வெட்டு வேற்றுமைகளும் வடநூலைப் பின்பற்றி அமைத்துக் கொள்ளப் பெற்றவை என்பார் ஒரு சாரார். வடநூலார் கூறும் 'விபத்தி' என்னும் கொள்கைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளை அவர் கருதினரில்லை. இவை பற்றி இந்நூலுரையுள் ஒரு சிறிது விளக்கப்பட்டுள்ளது...

தமிழ் இலக்கணத்திற்கு வடமொழி இலக்கணமே வழிகாட்டி என்றும், மூலம் என்றும் பிழையாக உணர்ந்த இடைக்காலத்தாரும், உரையாசிரியன்மாரும் தமிழ் மரபையும் தொல்காப்பிய நெறியையும் நடுவுநிலையோடு நோக்காமல் மூன்றும் வேற்றுமைக்கு மூன்று பொருள் உண்டு எனக் கூறிச் சென்றனர். ஆசிரியர் அது வினை நிகழ்தற்குரிய அடிப்படையாகும் கருவி என்னும் ஒரு நிலை மட்டுமே என்பது விளங்க, 'வினைமுதற் கருவி அனைமுதற்றதுவே' என்று கூறியதனை ஓராமல் வடமொழியின் தாக்கத்தான் வினைமுதலும் கருவியும் எனப் பிரித்து மயங்கினர். அவ்வாறே மூன்றும் வேற்றுமைக் கருவியாதற்குரிய பொருள் பலவற்றுள் 'அதனெடு இயைந்த ஒரு வினைக்கிளவி' என்னும் காரணத்தை உடனிகழ்ச்சிப் பொருள் என அமைத்துக் கொண்டனர்.

ஒன்றற்கு மேற்பட்ட பொருள்களை ஓர் எண்ணிக்கையாகக் கூறுதலும், ஒரு வேறுபாட்டினை இரண்டு வேற்றுமைகளுக்கு உரியதாகக் கூறுதலும் அறிவியலுக்கு முரணுவதை அவர் கருதிலர். கருதாமைக்குக் காரணம் தமிழ் இலக்கணம் வடமொழி மரபைப் பின்பற்றியது எனக் கொண்டமையே யாகும்.

...வடமொழிக்கு மாறாக—வேறாகத் தமிழிலக்கணம் இருத்தல் இயலாது, இருத்தல் கூடாது என்னும் அழுத்தமான எண்ணம் காரணமாக விளைந்த தடுமாற்றங்களே இவ்வேறுபாடுகளுக்கு ஏது எனலாம். தொல்காப்பிய அமைப்பையும் நெறியையும் நடுவுநிலையோடு நோக்கின் வடமொழியாளர் கூறும் வேற்றுமைக் கொள்கையினின்று, தமிழ்மொழியாளர் கொள்கை வேறுபட்டதென்பது விளங்கும்.

...தமிழ்நூலார் பொருள் வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு வேற்றுமைகளை வகுத்துக் கொண்டமையின் உருபுகள் தடுமாறி வரின், உருபுகளை நோக்காமல், பொருளை நோக்கியே வேற்றுமை உணரப்படும் என்பர். அதனால், உருபுகள் தடுமாறி வரும் நிலையை உருபுமயக்கம் என்று கூறி, அவை எவ்வெவ்வாறு தடுமாறி வரும் என்பதனையும் விளக்கினர். மற்றும், வேற்றுமை நிலையை எய்துவிக்கும் பொருள்களுள்ளும் சில தடுமாறி வரும் சில பொருட்கள் இரண்டு மூன்று வேற்றுமைகளைக் கொள்ளும் நிலையை உடையன. இவற்றையெல்லாம் வேற்றுமை மயங்கியலின் கண் விளக்குகின்றது தொல்காப்பியம். இம் மயக்கத்தின் நுட்பங்களை ஓராமல் உரையாசிரியன்மார் பல இடங்களில் நெறிதடுமாறி விளக்கங்கூறிச் சென்றுள்ளனர். அவற்றை ஓரளவிற்கு வேற்றுமை மயங்கியலுரையுள் கண்டு கொள்க. எழுவாய் வேற்றுமையின் மயக்கமே ஆகுபெயர் என்னும் வகையாகும். ஆதலின் ஆகுபெயர் இலக்கணத்தை இவ்வாசிரியர் வேற்றுமை மயங்கியலுள் விரித்தோதுகின்றார்.

...இயற்சொல்—திரிசொல்—திசைச்—வடசொல்—இவற்றைச் செய்யுளிட்டச்சொல் என்பார் தொல்காப்பியர். உரையும் பாட்டுமாக நிகழும் எழு வகைச் செய்யுளும் எழுத்துமொழி இலக்கியமாக நிகழுங்கால் வட்டார வழக்கும், அயல்மொழி வழக்கும் பற்றிப் பெயர்ச்சொல் முதலாய நால்வகைச் சொல்லையும் வகைப்படுத்தி அறிந்துணர்தற்கும், இலக்கியங்களைப் படைத்தற்கும் உரிய நெறியை விளக்குதலே இப் பாகுபாட்டின் கருத்தாகும்.

இவற்றுள் முதல் மூன்றும் தமிழ்மொழிக்கே உரிய சொற்கள். வடசொல் என்பது தமிழுக்கும் ஆரியத்திற்கும் பொதுவான எழுத்துகளானமைந்த இருமொழிக்கும் உரிய பொதுச் சொற்களும், சிறுபான்மை ஆரியத்திற்கே உரிய சொல்லைத் தமிழ் எழுத்துகளால் அமைத்துக் கொள்ளப்பட்ட சொற்களுமாம்.

இங்ஙனம் வட சொற்களையும் இலக்கியத்தில் சேர்த்துக் கொள்ளப் பெற்றமைக்குக் காரணம் அவற்றின் மூலப்பகுதி தமிழாக இருத்தலானும், வானியற் கலையையும், சமய மெய்ப் பொருள் கல்வியையும் இருமொழியாளரும் பொதுவாகக் கொண்டமையானுமாம். அதனால் இந் நூலுள்ளும் சூத்திரம், அதிகாரம், காண்டிகை, உத்தி, ஆதி, அந்தம் முதலிய சொற்களை ஆசிரியர் வழங்குவாராயினார். நாட்பெயர், திங்கட்பெயர் முதலியனவும் அம் முறைமையான் அமைந்தனவேயாம்.

...மொழி என்பது மக்கள் தம் கருத்துகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் கருவியாகும். சில கருவிகளைக் கொண்டு, பல்வேறு பொருள்களை ஆக்கிக் கொள்ளுதல் போலச் சில சொற்களைக் கொண்டே மக்கள் தம் சிந்தனையைப் புலப்படுத்தும் திறனைப் பெற்றுள்ளனர். அதனால் ஒரு சொல் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பப் பல்வேறு பொருள்களை உணர்த்தும்

# ஓர் அலுவலகம் செயல் படுகிறது!

பேராசிரியர் இராம. இருசு(ப்பிள்ளை)

அஃது ஒரு பெரிய அலுவலகம். ஆயிரம் பேர்களுக்குமேல் பணிபுரிகின்றனர். எல்லோரும் நல்ல மாதச் சம்பளம் பெறுபவர்கள். கடைநிலை ஊழியர்கள் கூட மாதம் உரு. 1750க்குக் குறையாமல் சம்பளம் பெறும் நிறுவனம்; மக்களுக்குத் தொண்டு செய்யும் நிறுவனம். பலமாடிக் கட்டிடத்தில் இயங்கிய அந்த நிறுவனத்திற்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுச்சென்றேன். அப்போது காலை மணி 11.

நான் சென்ற நோக்கத்தைச் செய்து முடிக்க ஓர் எழுத்தரிடம் சென்றேன். அவர் என் முன்னாள் மாணவர்; ஆனால், அவர் அவருடைய இடத்தில் இல்லை. பலருடைய இருக்கைகள் வெறுமனவே இருந்தன. ஓரிருவர் மட்டும் ஏதோ எழுதிக் கொண்டிருந்தனர். அவர்களைக் கேட்டபோது, அவர் உண்ணகத்தில் (கேன்டீனில்) இருப்பார் என்றனர். உண்ணகம் சென்றேன். அலுவலகத்தில் பணிபுரியும் பலர் அங்குதான் இருந்தனர். சிலர் வெளியே மரத்தடியில் காரசாரமாகத் தங்கள் தொழிற்கழகம் (யூனியன்) பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அலுவலக நேரமாயிற்றே, இங்கே இப்படிக் குதிரைப் பந்தயம் பற்றியும், சீட்டாட்டத்தில் ஏற்பட்ட வெற்றி தோல்வி பற்றியும், திரைப்படம், அரசியல் பற்றியும், திறனாய்வு செய்து கொண்டுள்ளார்களே என்று எனக்கு ஒரே வியப்பு.

நண்பர் ஒரு மூலையில் குளம்பி(காப்பி) குடித்துக் கொண்டு இருந்தார். அவரை அணுகியதும் அவர் எனக்கும் ஒருகுளம்பி

---

மரபினைப் பெற்று விடுகின்றது. அம்முறைமையால் வெளிப்படைச் சொற்களினும் குறிப்புச் சொற்கள் மல்கி நிற்கின்றன. சொற்கள் குறிப்புப் பொருள் தருங்கால் பெரும்பான்மையும் இணைந்தும் தொடர்ந்தும் நின்றே உணர்த்தும். சிறுபான்மை தனித்து நின்றுணர்த்தும். வெளிப்படைப் பொருள் தரும் சொற்களாவன இருதிணைப் பொருள் பற்றியும், முதற்கண் தோன்றிய நிலையில் பெற்ற அப் பொருளையே பற்றி நிற்பனவாம். குறிப்புப் பொருள் தரும் சொற்களாவன, வெளிப்படைச் சொற்களே மேலும் மேலும் ஒப்புமையாக்கத்தான் விரிந்து வந்தனவும், முன்னும் பின்னும் நிற்கும் சொற்களான் வேறுபடுவனவும், கூறுவோனது குறிப்பான் அமைவனவும், அவ்வாறு வரும் பிறவுமாம்.

சொற்கள் குறிப்புப் பொருள் பயக்கும் முறைகளை ஆசிரியர் சொல்லதிகாரத்தின் கண்ணும், பொருளதிகாரத்தின் கண்ணும் விரிவாக விளக்குகின்றார். சொல்லதிகாரத்துள் கிளவியாக்கம் முதலாய ஒன்பது இயல்களுள்ளும் இலக்கண முறைமையானும் மரபு நெறியானும் அமைத்துக் கூறுகின்றார்; (தொடரும்)

வாங்கிக் கொடுத்தார். நான் பேச்சைத் தொடங்கினேன். என்னப்பா அலுவலக நேரமாயிற்றே இவ்வளவு ஓய்வொழிச்சலாக இருக்கின்றீர்களே'' என்றேன். அதற்கு நண்பர் சொன்ன விடை என்னைத் தூக்கி வாரிப்போட்டது.

''ஐயா, காலை 10 மணிக்கெல்லாம் அலுவலகத்தில் வந்து விழுந்துவிடுவோம். எங்கள் நாற்காலி மிசைகளை ஒழுங்குபடுத்தி விட்டு, வந்த களைப்புத் தீர மின் விசிறியைச் சுழலச் செய்து காற்று வாங்கி ஒய்வு எடுத்துக் கொள்வோம். இதற்குள் 10-30 ஆகிவிடும். பிறகு ஏதோ ஒரு கோப்பினை எடுப்போம். அதனை மிகவும் மெத்தனமாகப் புரட்டிப் பார்ப்போம். அதற்குள் மணி 11 ஆகிவிடும். ஒவ்வொருவரும் உண்ணகத்துக்குச் செல்ல மற்றவரை விரைவுப் படுத்துவோம். இங்கே வந்து குளம்பி குடிக்க, புகைக்க, உரையாட 30 நிமையம் ஆகும். பின்னர் இடம் சென்று பணியைத் தொடங்க 11-45 ஆகிவிடும். மீண்டும் எங்கள் கவனம் பணியில் ஈடுபட 15 நிமையம் ஆகும். எடுத்த கோப்பினை விட்டு விட்டு வேறு ஒரு கோப்பு எடுப்போம். எதனையும் முடிக்காமல் எல்லாவற்றிலும் நிலுவை வைப்போம். அதுதான் சிறந்த தொழில் நுணுக்கம் (டெக்னிக்). வேலை செய்வது போலவும் இருக்க வேண்டும் வேலையும் முடியக்கூடாது. நாளெல்லாம் இரண்டு மூன்று கடிதங்களுக்கு விடை எழுதுவோம். இரண்டு மூன்று கோப்புகளைத் தொட்டுப் பார்த்திருப்போம். மாலை 5-00 மணி அடிக்க அடிக்க வீட்டுக்குப் புறப்பட்டுவிடுவோம்'' என்றார். எனக்கு ஒரே தலைசுற்றல். ''பலருக்கு வேலை இல்லை. பலர் வேலை செய்தும் ஒரு வேளை உண்ணுவதற்குக் கூட, போதாத ஊதியம். பலர் பட்டினி. இந்த நாட்டில் இப்படியுமா'' என எண்ணியவாறு ஒரு கேள்வி கேட்டேன்.

''ஐயா! உங்கள் மேலதிகாரிகள் கண்டிக்க மாட்டார்களா'' என்றேன். ''கண்டிக்கவாவது. ஐயா எங்கள் தொழிற்கழகம் (யூனியன்) மிகவும் வலிவான (ஸ்டிராங்கான) தொழிற்கழகம் (யூனியன்). கேட்டால் நடக்கும் வேலையும் நடக்காது'' என்றார். பலர்கூடி மக்களுக்குத் தொண்டாற்றும் எண்ணம் போய், பலர் கூடி வேலை செய்யாமலே சம்பளம் வாங்குவதற்குத்தான் ஒற்றுமை உணர்வு பயன்படுகிறது என்ற வருத்தம் ஏற்பட்டது. ''இது நல்ல வளர்ச்சியா'' என்றேன். ''ஐயா, அது பற்றி எங்கட்குக் கவலை இல்லை. எங்கள் குறிக்கோள் குறைந்த வேலை நிறைந்த சம்பளம். யாரும் எதனையும் கேட்க முடியாத தன்மான உரிமை. எங்கள் மேலதிகாரிகளும் அப்படித்தான். அவர்களுக்கும் தொழிற்கழகம்,(யூனியன்)போராட்டம் எல்லாம் உண்டு'' என்றார்.

''இந்திய நாடே! உழைக்காமலே பொருளீட்டவல்ல உத்திகளை எல்லாத் துறைகளிலும் வளர்த்து விட்டோமே, எவ்வாறு உன் எதிர்காலம் அமையுமோ'' என்று எண்ணியவாறு வெளியே வந்தேன்.

ஒரு மாதம் ஆயிற்று. அதே நண்பரைக் கடைவீதியில் கண்டேன். அவர் சொன்னார். "என் மகள் திருமணம் குறிந்த நாளில் நடைபெற முடியாத சூழ்நிலை உருவாகி விட்டது, படுகாலிப் பயல்கள் வேலையா செய்கின்றனர். இதோடு இந்த அலுவலகத்துக்கு இருபதுமுறை படையெடுத்திருப்பேன். என் மனைவி நாள் தோறும் வந்து செல்கிறார். என்ன ஐயா நாடு இது" எனப் பொரிந்து தள்ளினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

அமைதியாக 'என்ன ஆயிற்று? இப்படி வேகப்படுகிறீர்?' எனக் கேட்டேன்.

"ஐயா என் மனைவி ஆசிரியர் என்பது உங்கட்குத் தெரியும். என் மகள் திருமணத்திற்கு மாதவைப்புக் கடன் போட்டோம். மூன்று மாதங்களாகின்றன. வந்துவிடும் என நாள்கூடக் குறித்து விட்டோம். கடைசியில் இல்லாத விளக்கங்கள் எல்லாம் கேட்டு உரியகாலத்தில் தராமல் இழுத்தடிக்கிறார்கள்; மாப்பிள்ளை வீட்டார் காலில் விழுந்து திருமணத்தைத் தள்ளி வைத்தோம். என்றாலும் இன்னும் 15 நாட்களிலாவது கடன் கிடைக்குமா என்பது உறுதியாகத் தெரியவில்லை. எல்லா இடத்திலும் கொஞ்சம் எதிர்பார்க்கின்றனர். இது என்ன ஐயா நாடு? கடமையைச் செய்யக் கையூட்டா? என் மகள் திருமணம் என்பது அங்குள்ள பலர்க்கும் தெரியும். இருந்தாலும் பணம் பறிப்பதற்காக இழுத்தடிக்கிறார்கள். அதிகாரியைப் பார்த்தால் கண்காணிப்பாளரைப் பார் என்கிறார். கண்காணிப்பாளர் அந்த கோப்பைப் பார்க்கும் எழுத்தரைப் பார் என்கிறார். எழுத்தரோ அலுவலதிகாரியைப் பார்த்து வீட்டீர்கள் அல்லவா? சரி அவரையே பாருங்கள்" என்று கிண்டல் பேசுகிறார். இந்த ஞாயமின்மையைக் கேட்க ஆளே இல்லையா?" என்றார்.

"ஐயா என்ன செய்வது அவர்கள் தொழிற்கழகமும் வலிவானது. அதிகாரிகளுக்கும் தொழிற்கழகம். அவரவர் தங்களைச் சுற்றிச் சுற்றியே வருகின்றனர். கடமை கண்ணுக்குப் புலப்படுவதே இல்லை. உங்களுக்குத் தொல்லை வரும்போது இப்படிப் பேசும் நீங்கள், உங்கள் அலுவலகத்திற்கு நான் வந்தபோது உங்கள் அலுவலகப் பணிகள் பற்றிக் கூறியதனை எண்ணிப் பாருங்கள். இதே போன்று எத்தனைப் பேர்கள் உங்கள் பணியால் தொல்லைப் பட்டுக் கொண்டுள்ளனர் என்று. நாம் எல்லோருமே தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு என்றே எண்ணுகிறோம்; நம் எல்லையில் நாம் சிறப்பாகச் செயல்பட்டால் உலகம் தானே திருந்தி விடும்" என்று கூறினேன். "போங்கள் ஐயா, நீங்கள் எப்பப் பார்த்தாலும் இந்த 'வேதாந்தம்' தான் பேசுவீங்க" என்று கூறிச் சென்றாரே தவிர, எண்ணிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சம் கூட அவரிடம் இல்லை. இதுதான் இன்று அடிமுடி வரை உள்ள நிலைமை போலும்.

—நன்றி, 'சர்வோதயம்' சூன் 90

# நூல் நிறை

## நீ தமிழ் மகனா?

ஆசிரியர்—ப. எழில்வாணன்
வெளியீடு.—தமிழ்வாணன் பதிப்பகம்
பள்ளப்பட்டி-639 205.
கருவூர் வட்டம்.
பக்கங்கள்-80 விலை-உரு. 6.50

"நீ தமிழ் மகனா?" என்னுமொரு வினாவெழுப்பி, அவ்வினாவுக்கான விடைகளைவைத்து இன்றைய தமிழர்களிடையே தமிழர்களைத் தேடி இருக்கின்றார் இந்நூல் ஆசிரியர் புலவர் ப. எழில்வாணன் அவர்கள். மனத்துக்கு அமைவு கிடைக்குமளவு எவர் ஒருவரும் கிடைத்திலர் போலும்! அந்நிலையில் வெகுண்டெழுந்து அவர் பாடிய பாடல்களே இந்நூல் போலும்.

தாய்மொழியில்—தமிழில் புலமை என்றுகூடச் சொல்ல மாட்டோம்; அதன்மேல் ஓரளவுக்குப் பற்றும் கவலையும்கூட இன்றித் தம் வரலாற்று முறையிலான, மான உணர்விலான கடமைகளை எல்லாம் மறந்து அல்லது புறக்கணித்து, உயிர் அடையாளங்களை எல்லாம் இழந்து, ஓர் அயல்நாட்டவர் போல் தம்மை மாற்றிக் கொண்டு, நாளுக்கு நாள் படுவேகமாக இழிந்து போய்க் கொண்டு கிடக்கும் இன்றைய தமிழ் மக்களுக்குக் குறிப்பாக இளைஞர்களுக்கு இனமான அறிவு தெருட்டவும், அவர்களுக்கு உணர்ச்சிச் சூடேற்றவும், அவர்களை மீட்டெடுக்கவும் பெரிதும் பயன்படுமாறு எழுதப்பட்டது இந்நூல் எனலாம்.

"மனம் மாறிச் சென்றதேனோ?" 'தூயதமிழ்ப் பெயர் சூட்டுக!' 'சாதி என்ன சாதியிங்கு!' "இவனே தமிழ் மகனாம்!" போன்ற பன்னிரெண்டு தலைப்புகளில் பாடல்கள் யாக்கப் பெற்று இந்நூல் கட்டப்பெற்று உள்ளது.

தமிழே தமிழனை வாழவைக்கத் தக்கது; அவனை அடையாளம் காட்டவல்லது. அவனை உலகினில் உயர்த்தி வைப்பதுவும் அதுவே! இதையே பாவலர்,

"தமிழின்றி வாழ்வேது?
தமிழ்வீழ்ந்தால் நாடேது?
தமிழர்க்கும் வீடேது?
தாழ்விலையோ? சொல்க தமிழா!" (பக்கம் 22)

என்னுமிப் பாடலில் கேட்கும்பொழுது தான் எத்தனைச் சீற்றம் வெளிப்படுகிறது. இவை தமிழரைச் சிந்திக்க வைக்கும் வரிகள்;

சாதிகளை நாம் பெருமையுடன் வளர்த்த வகை, அதனால் விளைந்த தீங்கைக் கீழ்வரும் பாடலில் படிக்க நமக்கு வெட்கம் உண்டாகிறது. இது தொடர்பில் நம் பாவலர் சிந்தித்த சீர்மை மிகவும் நயம் உடையது. நம்மைத் திருந்த வைக்கும் வரிகள் இவை.

"சங்கெடுத்துப் பாலூட்டும்
சமயத்தின் சாதியையும்

சரியாகக் கலந்தூட்டித்
தடிமராய் வளர்த்தார் என்னே!-அது
பங்கெடுத்துச் செழித்தோங்கிப்
பாதாளம் வேருன்றிப்
பகைஎன்னும் கனிஈந்து
பண்பாட்டை அழித்த(து) இன்னே! (பக்கம் 34)

தமிழ்த்திரைப் படங்களின் இழிநிலைகளைப் பாவலர் சுட்டி எழுதியிருக்கும் பாடலில் அவரது சொல்லோட்டம் எவ்வளவு நெட்டோட்டமாக இருக்கின்றது. கீழ்வரும் பாடலைப் படியுங்கள்; சுவைத்து மகிழுங்கள்.

''கற்பழிப்பு, பல்லிளிப்பு,
கன்னியர்கள் மேல்குளிப்பு,
காமவெறி மிகுபடைப்பு,
கச்சவிழ்ப்பு! மிச்சம் என்ன?-அட, ஒரு

தற்குறியின் வம்பிழுப்பு,
தன்மானம் உயிர்ப்பறிப்பு,
தரமில்லாக் கதைப்படைப்பு!
தகர்த்தெறிவாய் அச்சம் என்ன? (பக்கம் 45)

அவரது உவமையழகுக்கு இதோ ஒரு பாடல்;

''சதைமட்டும் எலும்பின்றிச்
சரியான உடலாமோ? (பக்கம் 49)

எலும்புக் கட்டில்லாச் சதை உடலாகாதது போல் இலக்கணக் கட்டில்லாப் புதுப்பா! வரிகள் பாடலாகாது எனப் பாவலர் இப்பாடலில் சொல்வதைப் புதுப்பா அன்பர்கள் தேர்வார்களாக!

தூயதமிழ்ப் பெயர்சூட்டுக! தலைப்பில் வரும் பாடல்களில் பாவலர் ஆண், பெண் ஆகிய இருபாலர் தமிழ்ப் பெயர்களையும் எதுகை, மோனையுடன் வரிசையுறப் பாடியிருக்கும் அழகு தனி; அவர் பாடியிருக்கும் கேட்க இனிக்கும் தனித்தமிழ்ப் பெயர்களில் சில;

ஆண்:- பாவாணன், பாவேந்தன், தமிழ்வாணன், பெருவழுதி
பெருஞ்சித்திரன், பாரி, அதியமான்;

பெண்:- செந்தாமரை, மலர்விழி, ஏந்திழை, வேண்மகள்,
தேன்மொழி, வார்குழலி.

மற்றபடி இவரது பாநடையைப் பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை; பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களே தமது வாழ்த்துரையில், ''கன்னலென இனிக்குஞ்சொல், கருத்தூற்று, எம்புகின்ற பாட்டாற்றல் சுளிற்றுநடை!'' எனவெல்லாம் புகழ்ந்து எழுதியிருக்கின்றார்; இவற்றிற்கும் மேல் நாம் என்ன சொல்ல?

இந் நூலுக்கு இலக்கியச்செம்மல் புலவர் இரா; இளங்குமரனார் திறனாய்வுரையையும், தமிழ்ச்சுடர் இளமுருகு பொற்செல்வி அணிந்துரையையும் நல்கியுள்ளனர்;

ஒரு கோரிக்கை மடல்!

## எல்லா இதழ்களும் இருக்கிற போது தென்மொழி மட்டும் ஏன் இல்லை.

O பெறுநர்: திரு. முத்துக்குமாரசாமி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-13.

அன்புமிக்க தமிழ் நெஞ்சமே, வணக்கம். நான் நெல்லை நகரில் இயங்கும் ''சிவஞானமுனிவர் நூல் நிலைய''த்தோடு தொடர்புடையவன். அந் நூலகத்தில் மிகுதியான இதழ்கள் வருகின்றன. ஆனால் தூயத்தமிழ் இதழ்களாகிய தென்மொழி, தமிழ் நிலம், தமிழ்ச்சிட்டு போன்றவை அந் நூல்நிலையத்தில் இடம் பெறவில்லை. அ'து ஒரு மனக்குறையாக இருக்கிறது. அவ்விதழ்களைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கடந்த முப்பது ஆண்டுகளாய்க் கடும் முயற்சி செய்து நடத்துகிறார்கள்; நீங்களும் அதனை அறிந்திருப்பீர்கள்.

அண்மையில் தூயதமிழ்த் தந்தை என தமிழர் நெஞ்சங்களில் குடிகொண்டிருக்கும் திரு. மறைமலையடிகளார் பெயர் தாங்கிய ஒரு புகைவண்டி நிலையத்தில், அவர்களுடைய பெயரை அகற்ற தமிழர்கள் சிலர் முயன்றதை எண்ணி மிக வருத்தம் அடைந்தோம். 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் அது பற்றிய கட்டுரையைப் படித்து மன நிறைவு அடைந்தேன். அடிகளாரின் பணியைத் தொடர்ந்து பரப்பிவரும் பாவலரேறு அவர்களின் தூயதமிழ் பரப்பப்பட வேண்டும் அன்றோ! எனவே அருள்கூர்ந்து அந்நூல் நிலையத்தில் அம் மூன்று இதழ்களும் வரும்படி செய்வீர்கள் என நம்புகிறேன். தமிழுணர்வுடையவர்களே தமிழைக் காக்க முடியும். இம்மடலைப் பாவலரேறு அவர்களின் இசைவின்றித் தங்களுக்கு நான் எழுதுவதால் இப்படி ஒன்று அவர்களுக்கும் அனுப்பலானேன். வணக்கம். நன்றி.

தங்களுடைய அன்புக்குரிய —அதியமான், தாழையூற்று;

படி: தென்மொழி

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களின் ''தமிழியக்கம்'' நூலின் சாயலாய், அதனை அடியொற்றி எழுந்தது இந்நூல். இந்நூல் ஒவ்வொரு தமிழ்க் குடிமகனின் இல்லத்திலும் இருக்க வேண்டியது. இவரது கொள்கைகள் வெல்க எனச் சொல்லி வாழ்த்துகிறோம்! இவரை நாம்

—அரிமா.

---

### அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

# அத்திப்பூ

நாடக ஆக்கம்: -அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 'பாவியக் கொத்'தில் ஒரு மலர்!)

காட்சி—4

உறுப்பினர்கள்: அன்பரசன், கயல்விழி, முதல் இரவு பற்றிப் பேசிய ஆறு பெண்கள், முத்தப்பன், கயல்விழியின் தோழி அஞ்சலாள் (Postman).

இடம்: தனி அறை

காலம்: இரவு

நிலை: அத்தி பூக்கிறது.

அன்: (உள்ளம் நினைக்கிறது) இந்த நேரத்தில் வரவேண்டியவள் கயல்விழி. ஆனால் வந்தவர்கள் யாவரும் பிந்த வேண்டியவர்கள். இவர்கள் முந்திவிட்டார்கள். வரவேண்டியவள் இன்னும் வரவில்லை. (எட்டிப் பார்க்கிறான்). சரி அப்படியே வந்தால் முதலில் பேச்சை எப்படித் தொடங்குவது? அவளே தொடங்குவாள். சே, சே. பெண்ணுக்கு நாணம் என்ற குணம் உண்டு என்பார்களே. அப்படியானால் அவள் பேச்சைத் தொடங்க மாட்டாள். அப்படியானால் எப்படிப் பேச்சைத் தொடங்கலாம். நண்பர்கள் பகடியாகக் கூறியது போல முன்பழக்கம் இருந்தால் கொஞ்சம் எளிதாக இருக்கும். அதுவும் இல்லை. சரி; சரி வரட்டும், பார்ப்போம்.

6 பெண்கள்: (கயல்விழியைத் தனி அறைக்குள் அனுப்புவதற்காக அழைத்துக் கொண்டு வருகிறார்கள். சிரிப்பொலி கேட்கிறது.)

பெண்-1. வாங்கடி, கயல்விழியை அறைக்குள் தள்ளி விடுவோமா?

பெண்-2: ஆமாம், ஐயா உள்ளே காத்துக் கொண்டிருக்கிறார்.

பெண்-3: (கயல்விழியை கையால் பிடித்து உள்ளே தள்ளுகிறாள்.) போம்மா போ.

6 பேரும்: (கொல்லென்று சிரிக்கிறார்கள்.)

அன்: (சிரிப்பொலி கேட்டு நிமிர்ந்து பார்க்கிறான். கயல்விழி கதவண்டை நிற்பதைக் கண்டு அழைக்கிறான்.) வா. கயல்விழி வா.

கயல்: (குனிந்த தலையுடன் நிற்கிறாள்.)

அன்: (எழுந்து வந்து அவளை அழைத்துக் கொண்டு சென்று கட்டிலில் அமர வைக்கிறான்.) கயல்விழி இப்போது முதல் இரவு, தெரிந்துதானே ஒதுங்கி நிற்கிறாய்?

கயல்: (பேசவில்லை).

அன்: ஏன் பேச வாய் வரவில்லையோ? வெட்கமோ?

கய: (பேசவும் இல்லை, குனிந்ததலை நிமிரவும் இல்லை)

அன்: தனி இரவில் குனிந்த தலை நிமிரவில்லை; பெண்மை உணர்வு அற்றவளா நீ?

கய: (கண்ணீர் சிந்துகிறாள்;)

அன்: (கைகளில் கண்ணீர் சிந்துகிறது அதனைப் பார்த்து.) அடடே, பெண்மை இல்லை என்று சொன்னது வருத்தமோ? கயல்விழி வேடிக்கையாக அப்படிச் சொல்லி விட்டேன். அதற்காக அழவேண்டாமே (அணைத்து) வா, வா, மன்னித்து விடு;

கயல்: (மீண்டும்அழுகிறாள்)

அன்: வருந்துகிறேன். கயல், நான் உண்மையிலேயே வருந்துகிறேன்; இனி அப்படியெல்லாம் பேச மாட்டேன். உன் உள்ளம் புண்படும் என எண்ணிப் பார்க்காமல் வேடிக்கைக்காக அப்படிப் பேசி விட்டேன்;

கயல்: (அழுது கொண்டே இருக்கிறாள்; கண்ணீரும் வழிந்து வடிகிறது.)

அன்: (தலையை நீவி) கயல், நீ அழுவதின் கரணியம் தெரியவில்லையே. ஓகோ, சரி சரி தெரிந்தது: நகை, நட்டு, சீர், செல்வம் கொண்டு வரவில்லையே என்ற கவலையோ?

கயல்: (பேசவும் இல்லை, அழுகையும் நிற்கவில்லை.)

அன்: (முதுகுப்பக்கம் தடவி) கயல் உன்னிடம் சீரையோ, செல்வத்தையோ நான் எதிர்பார்க்கவில்லை; கவலைப்படாதே; (தன்னோடு அணைக்கிறான்.)

கயல்: (விடையில்லை. கண்ணீரும் நிற்கவில்லை)

அன்: கயல், ஒரு வேளை என் அன்னை, தங்கை நீ பொருள் எதுவும் கொண்டு வரவில்லையென குறை கூறுவர் எனக் குழம்புகின்றாயோ?

கயல்: (விடையேயில்லை; தேம்பி அழுகிறாள்)

அன்: கயல், அன்னையின் அன்பில் இந் நாள் வரை இன்பமாய் வாழ்ந்து, இப்போது பிரிந்ததை எண்ணி அழுகிறாயா?

கயல்: (விடையில்லை, அழுகையும் நிற்கவில்லை)

அன்: இத் திரு நாளில் புது இன்பம் அடைய அச்சமோ! இல்லை கூச்சமோ? அப்படியானாலும் அழவேண்டாமே, கண்ணீரும் சிந்தவேண்டாமே;

கயல்: (விடைஇல்லை, அழுகையும் நிற்கவில்லை;)]

அன்: காதல் சூட்டால் காயும் என் உடலைக் குளிரவைக்காமல் கண்ணீர்சிந்தி என்னைக் கலங்க வைக்கத்தான் என்னை நீ மணந்தாயோ? அடி பேதையே! ஒரு வேளை என்னைப் பிடிக்கத்தான் இல்லையோ? ம்; (தோள்களைப் பிடித்துக் குலுக்கி) கயல், நீ வேறு

ஓர் ஆணை விரும்பி என்னை வெறுக்கிறாயா? நான் உனக்குப் பிடிக்கவில்லையா? துடிக்கிறேன். நான் கயல், உன் உள்ளத்தில் உள்ள உண்மையைச் சொல். என்ன நான் கெஞ்சுவது உன் செவிகளில் படுகிறதா? இல்லையா? உண்மையைக் கூறு. என்னைப் புலம்ப வைக்காதே.

கயல்: (பேசவில்லை)

அன்: நீ ஊமை இல்லை என்பதற்கும், சற்று முன்புதானே உன் தோழிகளுடன் பேசினாய்! கேள், கயல். நான் உன் கணவன் என்பதை ஏற்றுக்கொண்டாயா இல்லையா? உண்மையை சொல்; எனக்கு உன் விடை விரைவாக வேண்டும். வீணே இவ்விரா கழிந்து கொண்டிருக்கிறது.

கயல்: (பேசவில்லை)

அன்: சில பெண்கள் இப்படி முரண்டு பிடிப்பார்கள் என்பது இப்போது தான் தெரிகிறது. கயல் உனக்கு ஏற்பட்டுள்ள துன்பந் தான் யாதோ? கூறு. இன்பத்திற்குத் தடைதான் யாதோ? சொல்;

கயல்: (அன்பரசனின் மடியில் குப்புறப் படுத்துக் கொண்டு ஏங்கி அழுகிறாள்.)

அன்: கயல், என்னைப் பிடிக்கவில்லை என்பதனால் வெறுப்போ? அப்படியானால் இம் மணத்திற்கு நீ ஒப்பி இருக்க வேண்டாமே; என்னைத் துன்புறுத்தாதே! உள்ளதைச் சொல்.

கயல்: (பேசவில்லை.)

அன்: (மடியிலிருந்து அவளை எடுத்து நிறுத்தி) கயல், இதோ என்னைப்பார் (முகத்தைத் தன் பக்கம் இழுத்து) உன்னை நான் இன்னுந் தீண்டவில்லை; நீ கண்ணீர் வடிப்பதற்கும் கரணியம் என்னவென்று புரியவும் இல்லை. என் அன்னையின் அன்பிலிருந்தவன்; தங்கையின் குணத்தில் திளைத்தவன். இது தவிர பெண்குணம் தெரியாது; ஏனென்றால் முன்னாள் காதலன் இல்லை நான்; புதுக் காதலன்; கயல் நீயும் அப்படித்தான் இருப்பாய் என நினைக்கிறேன்; அதனால் எனக்குக் காதலிக்கத் தெரியவில்லை எனக் கண்ணீர் சிந்துகிறாய் போலும். காதலுக்கெல்லாம் முன் பயிற்சி வேண்டாம்; கவலையை விடு; இனி நாம் காதலித்துப் பழகலாம் (கண்ணீரைத்துடைத்து) என்னைப் பார், நன்றாய் பாரேன் என் மனம் ஆறுதல் அடையட்டும்;

கயல்: (ஏறிட்டுப் பார்த்தாள், ஆனால் பேசவில்லை.)

அன்: அப்பா! பார்க்கவாவது செய்தாயே ங்...கயல், நீ வருந்த வேண்டாம். நான் உன்னிடம் ஒன்றைக் கேட்கிறேன்; அஃதாவது கயல், ஒருவேளை நீ என்னை விரும்பாததற்குக் கரணியம், வேறு ஓர் ஆடவனை நீ மணக்க எண்ணி ஏங்கி இருப்பாயோ, என, எனக்கொரு ஐயம்; அப்படியே ஆனாலும், ஒரு பெண்ணின் வாழ்வை நான் சிதைக்க விரும்பவில்லை; அப்படியானால் உண்மையை வாய்மையோடு என்னிடம் ஒளியாமல்

சொல்: அப்படிப்பட்டவனை நீ விரும்பியிருந்தாலும் அவனைத் தேடிக் கொண்டுவந்து உனக்கே மணம் முடித்து வைக்கிறேன். அதில் எனக்கு மகிழ்ச்சியே தவிர மனமுடைந்து போகமாட்டேன். ஏனென்றால் ஒரு பெண்ணின் வாழ்க்கை, ஆயிரங்காலப் பயிர் என்பார். ங்...சும்மா உள்ளதை ஒளியாமல் சொல்லி விடு.

கயல்: அத்தான்! (கண்ணீரை முந்தானையால் துடைக்கிறாள்)

அன்: அப்பா! இவ்வளவு நேரமா? ங்...சொல். என்னை நன்றாக நம்பு. உள்ளதை மறைக்காமல் சொல்லி விடு. உண்மைக்கு மதிப்புக் கொடுப்பவன் நான்.

கயல்: அத்தான் (அவனை நோக்கி) எப்படிச் சொல்வேன்?

அன்: ங்...நீ ஒரு புதுமைப் பெண். சும்மா சொல். எவ்வகையான கலக்கமும் வேண்டாம். விளக்கமாகச் சொல். உன் சொல்லைக் கேட்டு, விரும்பியே கேட்கிறேன்.

கயல்: உங்களை நான் அத்தான் என்றழைக்கக் கூடத் தகுதியற்றவள் என்றுதான் இத்தனை நேரமும் கலங்கி மயங்கினேன்.

அன்: தயங்காதே; உள்ளத்தில் இருப்பதைச் சொல்ல உரிமை எல்லோருக்கும் உண்டு. அதை மறைத்தால் தான்கள்ளம்.

கயல்: நான் உங்களை அத்தான் எனக்கூற என் உள்ளம் ஒப்பவில்லை.

அன்: ஏன்?

கயல்: என் கலங்கிய உள்ளம்; அச்சத்தால் நடுங்குகிறது; அதனால்...

அன்: வாய்மையைக் கூறுகிறேன். கலங்காதே. நான் பிடிக்கவில்லையோ?

கயல்: பிடிக்கவில்லை என்றால் மனங் கலங்காது; வெறுக்கும்; அப்படியும் அன்று.

அன்: பின் என்னவாம்?

கயல்: இந்தத் திருமணம் முடிந்த பின்புதான், இதற்கு ஒப்பியதே தவறென்று நினைத்து மனம் குழம்பிக் கொண்டிருக்கிறேன்.

அன்: குழம்பிய குட்டை எப்படியும் தெளியுமே! அந்தத் தெளிவு இன்னுமா ஏற்படவில்லை? நான்தான் முதலிலேயே சொன்னேனே; வேறு ஓர் ஆணை நீ விரும்பினால் அரிதில் முயன்று உன் விருப்பத்தை நிறைவு செய்து வைக்கிறேன்.

கயல்: நான் வேறு ஓர் ஆணை விரும்பவுமில்லை;

அன்: அப்படியானால் என்னை...

கயல்: முதலில் விரும்பியது உண்மை; ஆனால் இப்போது என் உள்ளத் தேக்கத்தை வெளிப்படுத்தி அப்பயனை நுகரும் முன்னால் உயிரைப் போக்கிக் கொள்ள எண்ணம்;

அன்: என்ன சொல்லுகிறாய்? இது ஒரு நல்லிரா இல்லையா?

கயல்: துன்ப இரவாக முடியும் என்று நினைக்கிறேன்.

அன்: சீ. தீச் சொல்லைச் சொல்லாதே; எனக்குத் துன்பத்தைத்தந்து விடாதே.

கயல்: நீங்கள் துன்புறுவதை நான் உணர்கிறேன். அதனாலேயே உங்களோடு பேசவும் துணிந்தேன்.

அன்: அப்படியானால் நன்றாகப் பேச வேண்டியதுதானே.

கயல்: ஆமாம் அத்தான். என் உள்ளத்தில் அழுக்கு கிடக்கிறது. நான் விரும்பாமலே நடந்த நிகழ்ச்சி அது. என் உடலுக்குள் திணிக்கப்பட்டது. அதை ஒரு நல்லவரிடம் சொல்லி விட்டு உயிரை விட்டு விட எண்ணம். அந்த நல்லவர் நீங்கள் என்பதால் உங்களிடம் சொல்லவே இந்தத் திருமணத்திற்குச் சரியென்றேன்.

அன்: என்னை நல்லவனென்று எப்படிப் புரிந்தாய்?

கயல்: என் திருமணத்தை எடுத்துப் பேசிய பெரியோர்கள் அனைவருமே உங்களை அறிவும் அருளும் உடையவர் என்றனர்.

அன்: அதை எப்படித் தெளிந்தாய்?

கயல்: என் குணம் மட்டும் போதும்; பணம் வேண்டாம் என்று நீங்கள் கூறியதாய் அவர்கள் கூறினார்கள். அஃது எனக்குத் தெளிவைத் தந்தது.

அன்: கயல், நீ தேர்ந்ததில் தவறு இல்லை; இல்லையா? ஏனெனில் நம்முடைய திருமணமும் அப்படியே நடந்தது இல்லையா?

கயல்: ஆமாம். சொன்னபடியே நடந்தது. அதனால்தான் உங்களை முழுதாக நம்பினேன். அதுமட்டுமன்று உங்களை நான் நல்லவராக மதிக்கிறேன். அத்தான்! அறிவும் அருளுமே மாந்தரினத்தைக் காக்கும் சிறந்த பண்புகளாகுமென நான் அறிந்திருக்கிறேன். அந்தப் பண்புகள் உங்களிடம் இருப்பதை என் பட்டறிவால் புரிந்து கொண்டேன்.

அன்: அப்படியா? சரி, என்ன சொல்லப் போகிறாய்?

கயல்: நான் ஒரு கற்பிழந்த பெண்.

அன்: அப்படியென்றால்?

கயல்: கற்பிழந்தவள் நான் என்றதும் நீங்கள் அதிர்ச்சியடைந்திருக்க வேண்டும். ஆனால் இல்லை. எதனையும் தேரும் அறிவு இருக்கிறது உங்களுக்கு என்பதற்கு நானே சான்று. அத்தான் நான் சொல்லுவதைக் கேளுங்கள்; பெண்களுக்கு மட்டும் கற்பு என்ற ஓர் ஒழுக்கம் இருக்க வேண்டும் என்பதான முறை இக் குமுகாயத்தில் பேசப்படுகிறதே; அதைத்தான் இழந்திருக்கிறேன்.

அன்: குமுகாயம் பேசுவதெல்லாம் சரியென்று கருதுகிறாய்? நம் நாட்டுக் குமுகாயத்திற்கு சிக்கல்முக்கலான (Complicated) நோய் பிடித்திருக்கிறது; பல்லாண்டுகளாய் அதிலிருந்து விலக

எவ்வகைச் சிந்தனையும் இல்லாமல் இருக்கிறது என்பதை நீ அறிந்தும் இருப்பாய்.

*கயல்:* பெண்களைப் பொறுத்தமட்டில் கற்பு பெண்களுக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்ற நடை முறை உள்ளவே;

*அன்;* குமுகாயம் பேசுவதெல்லாம் சரியென்றால் சீர்திருத்தம், புரட்சி, ஆகியவை நிகழாதே.

*கயல்:* கற்பிழப்பு என்பது ஒரு குற்றந்தானே!

*அன்:* ஆமாம், குற்றம் களையப்பட வேண்டியது தானே தவிர தூற்றப்படுவதற்குரியதில்லை. அதைத்தான் கடைப்பிடிக்கிறேன்;

*கயல்:* குற்றம், தூற்றப்பட்டுத்தானே வருகிறது. ஒரு பெண் தவறும் குற்றம், மின்சார வேகத்தில் தூற்றப்படுகிறதே, அது மட்டுமன்று மின்சாரம் தாக்கினால் மன்னிப்பில்லையே!

*அன்:* அப்படிப்பட்ட மின்சாரத்தை மாந்தன் அவன் நினைத்தபடியெல்லாம் இயக்குகிறான்; கண்டபடி ஆட்டிவைக்கிறான். அது போன்று குற்றத்தையும் எப்படியும் திருப்பி விடலாம்.

*கயல்:* அப்படி ஆளுவதும் ஒருகலைதான். ஆனால்...

*அன்:* என்ன ஆனால்? கயல், ஒரு வீட்டில் குப்பைகள் வர வர என்ன செய்கிறோம், கூட்டி அள்ளி வெளியில் வீசி விட்டு வீட்டைத் துப்புறவு செய்யத்தானே செய்கிறோம்., குப்பை வந்து விட்டது என்பதற்காக வீட்டையா இடிக்கிறோம்; இல்லையே!

*கயல்:* இல்லை அத்தான். நான் கற்பிழந்தவள் என்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*அன்:* இழப்பு என்றால் குறை தெரிய வேண்டும் அல்லவா? கேள், கயல்; ஒருவனைக் கை இழந்தவன் என்றால் அவனுக்குக் கை இருக்காது அல்லவா? கால் இழந்தவன் என்றால்?

*கயல்:* அவனுக்குக் கால் இருக்காது.

*அன்:* கண் இழந்தவன் என்றால்?

*கயல்:* அவனுக்குக் கண் இருக்காது.

*அன்:* கற்பிழந்தவள் என்றால் என்ன இருக்காது?

*கயல்:* எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

*அன்;* இழந்த பொருள் இல்லை என்றால்தான் இழப்பு; பொருளை வைத்துக் கொண்டு எவனாவது அப்பொருள் இல்லை என்று சொன்னால் அவனுக்கு அறிவில் ஏதோ கோளாறு இருக்க வேண்டும். அப்படித் தானே!

*கயல்:* அப்படித்தான் ஆனால்...

*அன்:* என்ன, ஆனால், நீ கற்பிழந்தவள் என நான் நம்புவதற்கு என்ன அடையாளம் காட்டு பார்க்கலாம்.

*கயல்;* என் மனச் சான்று...

அன்: அந்த மனச் சான்று உண்மைதான் என்பதை நான் எந்தக் கருவி கொண்டு காண்பது? உண்மையை உண்மையென்று கண்டு கொள்ளவே சான்று வேண்டுமே.

கயல்: நான் சொல்லுகிறேன் அல்லவா?

அன்: நீ சொல்லா விட்டால்...

கயல்: தெரியாது.

அன்: அது சரி, உன்னைக் கற்பிழக்கச் செய்தவன் யார் தெரியுமா?

கயல்: தெரியாது.

அன்: அப்படியானால் அது கனவாக இருக்கலாம் அல்லவா?

கயல்: இல்லை. உண்மையாக நடந்தது. அத்தான், இப்போது எந்தப் பெண்ணை இனியவள், துணையானவள், மனையைக் காக்க வந்த மனையாள் என்று என்னைத் தழுவத் துடிக்கிறீர்களோ, அவள் ஒருவனால் உண்ணப் பட்டவள்.

அன்: நிறுத்து. கயல் நான் கேட்கிறேன். நீ எப்படி ஒருவனால் உண்ணப்பட்டவள் என்று சொல்லி உயிர்விடத் துணிவது போல் அவன் உன்னால் உண்ணப்பட்டவன் என்று உயிர் விடத் துணிவானா?

கயல்: அவன் ஆண் ஆயிற்றே. அவன் வேறு ஒரு பெண்ணை மணஞ்செய்து கொள்ளலாம். அது குற்றம் என்று யாரும் சொல்லார்.

அன்: அது போல ஒரு பெண்ணும் ஓர் ஆணை மணந்து கொள்ளலாம் என்பேன்,

கயல்: அதைக் குமுகாயம் ஏற்காதே;

அன்: ஏற்க வைக்க வேண்டும், கயல், கண்ணகி கோவலன் கதை தெரியுமா? உனக்கு.

கயல்: சொல்லுங்களேன்;

அன்: கோவலனைப் பாண்டியன் நெடுஞ்செழியன் கள்வன் என்றான்; கொலையும் செய்தான். அதைக் கண்ணால் கண்ட குமுகாயம் ஒன்றும் செய்யவில்லை. தன்னுடைய கணவனைக் கள்ளன் என்று சொன்னவனை அவன் அரசன் என விட்டு வைத்தாளா?

கயல்: இல்லை.

அன்: வழக்காடினாள்; குற்றம் என்பதை யார் செய்தாலும் குற்றமே என்று ஞாயம் கற்பித்தாள். வென்றாள். அது போலத்தான் ஆண் என்றால் குற்றஞ் செய்யலாம் என விட்டு விட்டால் குற்றம் எங்கே மறையும்? நீ கற்பிழக்க வேண்டுமானால் அவனும் சேர்ந்தால்தானே முடியும்? நீ குற்றவாளி என்றால் அவனும் குற்றவாளி தான். அவனொரு பெண்ணை மணந்து கொள்ள முடிந்தால் உன்னாலும் அது முடியும். அவன் யார் என்று சொல், எப்படி நடந்தது என்று விளக்கமாகக் கூறு. (திரை.) (தொடரும்)

# பாவேந்தர் கொள்கைப்படி பாவலரேறு விலகல் சரியே!

--புலவர். சி. வெற்றிவேந்தன். இலக்.இ.

''கெடல் எங்கே தமிழின் நலம்
அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!''

—என்பது பாவேந்தர் கொள்கை! பாவேந்தர் நூற்றாண்டு விழா இத் தமிழ்நாடெங்கும் 'தானைத் தலைவர், தமிழினத் தலைவர்' என்று பட்டம் தாங்கிய கலைஞர் ஆட்சியில் விளக்கணி விழா பட்டாசுவெடி போல, அவ்வப்போது வெடித்துச் சிதறும்! வெளிப்பூவை (வேடய்)இட்டுப் பாவேந்தர் கொள்கைக்குச் சரிசெய்வது போல் நடிப்பார்களே ஒழிய, பாவேந்தர் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறார்களா என்று கேள்விக் கேட்கக் கூடாது! பாவேந்தர் விழா பாரதி—தாசன் விழாவாகக் கொண்டாடுவார்கள்! பார்ப்பனியத்திற்குப் பாதம் தாங்கித், தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாட்டையும், பாவேந்தர் விழாவையும் தடைசெய்து, 'இரும்புக்கை கொண்டு மண்டையில் ஓங்கியடித்து உட்கார வைக்கும் சிறைக் கூடத்தின் தலைவர் அல்லவா அவர்! பெயருக்குத்தான் ''பாவேந்தர் நூற்றாண்டு விழா உறுப்பினர் கூட்டம்'' போடுவது ''மக்களின் கண்துடைக்கும் வேலை'' என்பது பாவலரேறு ஐயா அவர்கட்கு முன்னமே தெரிந்திருக்கும்! இருப்பினும் தம் கருத்தை உயர் குழுவின் முன் வெளிப்படுத்தியமைக்குக் காரணம், பாவேந்தரைச் சிறப்பிக்க வேண்டிய கடமைகளைச் சுட்டிக் காட்டுவதற்கேயாகும்! அப்படிச் சுட்டியதற்கும் காரணம் பாவேந்தரின் அஞ்சா நெஞ்சமும், நெஞ்சத்துணிவும் பாவலரேறு அவர்களிடம் ஆட்பட்டிருந்ததால் தான்!

பாவேந்தர் நூற்றாண்டுவிழா வெடுக்க வேண்டிய இக் கட்டாயச் சூழலில், பாவேந்தரின் சிறப்புக் கொள்கைகள் எவை எவை எனச் சுட்டிக் காட்டுவது இங்கு மிக மிகப் பொருத்தமானதாகும்!

(1) பாவேந்தரின் தனித்தமிழ்ப்பற்று;
(2) தமிழ் ஆட்சி மொழியாகவும், அலுவல் மொழியாகவும் தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் ஆக்குதல்;
(3) கோவில்களில் தமிழ் வழிப்பாடு கொண்டு வருதல்;
(4) பகுத்தறிவுக்கண்ணோட்டத்தில் மாந்த நேயம்;
(5) பெண்களுக்குச் சம உரிமை வழங்குதல்;
(6) தமிழ்நிலத்திற்குரிய பொதுமை ஆட்சி நிறுவுதல்;
(7) சாதி, சமய மற்ற தமிழின விடுதலை பாதையில் தனித்தமிழ் நாட்டு விடுதலை!

—இக் கொள்கைகளின் உள்ளடக்கமாகவே மற்றைய சீர்திருத்த நடவடிக்கைகள் பொருந்தியிருக்கும்;

இக் காலத்தில் பாவேந்தருக்குப் பின் ''பாரதிதாசன் பரம்பரை'' என்றொரு ''பரம்பரை'' என்று மார்தட்டிக் கொள்-

வோர் கூட, இக் கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல், பாரதிதாசனாகவே—இல்லை தாசனுக்குத் தாசனாகவே காட்சியளிக்கிறார்கள்! மிகச் சிலரே பாவேந்தரின் உள்ளத்தை, உண்மை உணர்வை மதித்து வருகின்றார்கள்! அப்படிப்பட்டவரில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் மட்டுமே தமிழின விடுதலைக்குப் பாவேந்தரின் அடிச்சுவட்டில் அடியெடுத்துப் பீடு நடைபோடுபவர் ஆவார். அவர்தம் தமிழ்த்தொண்டும் சிறந்த பா வன்மையும், தமிழ்நாட்டுக்கு நன்கு தெரிந்தனவே! தமிழக விடுதலை மாநாடுகள் மூன்றை நடத்திச் சிறை சென்று, சிறையிலேயே கிடக்கும் முத் தமிழின் மீட்சிக்குத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் மூன்று இதழ்களும் தாழ்ந்துபோன இத் தமிழகத்திற்காகவே நடத்தி கொண்டுவரும் நெஞ்சுரம் கொண்ட அஞ்சாத அரிமா ஆவார்!

பாவேந்தர் நூலாகிய "தமிழியக்கமே" தடை செய்யப்பட்டு, முடக்கிப்போட்ட பல்கலைக் கழகத்தின் பெயர் பாரதிதாசன் பல்கலைக்கழகம்!

"தமிழர்க்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப்போகும்"

—என்றுரைத்தவரின் தமிழ்த் தொண்டை மதிக்காமல் மிதிப்போர்தாம் பாவேந்தர் விழா வெடுத்து வெளிச்சம் போட்டுப் 'பாவேந்தர் படம் திறந்து' தங்கள் முகங்களைக் காட்டி விளம்பரம் பெற்றுக் கொள்ளும் எத்தர்கள்! இல்லை பித்தர்கள்—விளம்பரப் பித்தர்கள்!

"அரசியல் விரகுகள் ஆயிரம் கோடி
ஆரவாரங்கட்கே மாடிமேல் மாடி
முரசறைந் தென்பயன் விடுதலை நாடி
முனைபவர் குலைவதோ நாட்கு நாள் வாடி"

—என்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் கருத்துப்படி, என்று தான் இந்தத் தமிழகம் உருபடியாகுமோ என எண்ண வேண்டியுள்ளது!

'கட்டாய இந்தியை வெட்டிப் புதைப்போம்'—என்ற பாவேந்தர் வரியைச் சொல்லியே, ஆங்கிலக் கல்வி பரவ, தனியார் பள்ளிகள் 50,000 தமிழகத்தில் திறந்தவர் யார்? இந்த "திராவிடர்" ஆட்சியில் தானே! போதாக்குறைக்குத் "தமிழ்க்கல்வி தமிழ் நாட்டில் கட்டாயம் என்பதொரு சட்டம் செய்க" —என்று கூட்டத்தில் பாவேந்தர் பாடலைப் பிதற்றிய கல்வியமைச்சரே இந்த ஆண்டு முதல் அரசுப் பள்ளிகளிலும் ஆங்கிலப் பாடவழி திறந்து "தமிழ் வாள்க!" என்று நீலிக் கண்ணீர் விடுகிறார்களே! இதுவா பாவேந்தருக்குச் செய்கின்ற நன்றி? இதுவா பாவேந்தரின் கொள்கை? 'தமிழாய்ந்த தமிழன்தான்—தமிழ்நாட்டின் முதலமைச்சர் தாந்—தாம்' என்று மார்தட்டிக் கொள்கிறாரே! (தொடர்ச்சி 32-ஆம் பக்கம்)

# செய்திகள்

## 1. வ.சுப.மாணிக்கனார்—முதலாண்டு நினைவு!

கடந்த 25-4-90 மாலை 7 மணியளவில், சென்னை, பாவாணர் மாவட்ட நடுவண் நூலகத்தில், மூதறிஞர், செம்மல் வ.சுப.மாணிக்கனார் அவர்களின் முதலாண்டு நினைவுக் கூட்டம். புலவர் த.எழிலரசனார் (சுந்தரராசன்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புலவர் தா.முத்துமணவாளன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தொடக்கத்தில் வ.சுப.மாணிக்கனார் அவர்களின் படத்தைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் திறந்து வைத்தார். பிறகு மூதறிஞரை நினைவு கூர்ந்து பேரா.வளனரசு, பேரா.த.வெ.மணிமாறன், ந.அரணமுறுவல், புலவர் வெற்றியழகன், வ.சுப.மா. தொல்காப்பியன் பெரும்பாக்கோ வா.மு.சேதுராமன், பேரா.இளவரசு, ஆகியோர் உரையாற்றினார்கள். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நிறைவுரை ஆற்றினார். நன்றியுரையை நாஞ்சில் மைந்தன் நவில நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## 2. பைந்தமிழ்ப் பாசறையின் பாவேந்தர் நூற்றாண்டு விழாவும், அலர்மேலு அப்பாத்துரையார் குடும்பத்திற்கு நலக்கொடை வழங்கு விழாவும்:

தி.பி.2021 மேழம் 21 (4-5-90) வெள்ளியன்று சென்னை, எண்ணூர், அசோக் இலேலண்டு தொழிலக முதன்மை நுழைவு வாயில் எதிரில், பைந்தமிழ்ப் பாசறையின் சார்பில், பாவேந்தர் நூற்றாண்டு விழா, சீரும் சிறப்புமாகக் கொண்டாடப் பெற்றது. அவ் விழாவில் முற்பகல் நிகழ்ச்சியாகப் பாட்டரங்கமும், பிற்பகல் நிகழ்ச்சியாக, மறைந்த பன்மொழிப் புலவர் க.அப்பாத்துரையார் அவர்களின் நலிவுற்ற குடும்பத்திற்கு நலக்கொடை வழங்கிப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புரையாற்றிய நிகழ்ச்சியும் நடைபெற்றன.

முற்பகல் நடந்த பாட்டரங்க நிகழ்ச்சியில், அசோக் இலேலண்டு தொழிலகத்தில் பணிபுரியும் திரு.அருணகிரி அவர்களின் துணைவியார் திருவாட்டி. சுகுமாரி அம்மையார் க.மு.கல்.இ. அவர்களின் தலைமையில், தொழிலகத்தில் பணிபுரியும் பாவலர்கள் சீ. அறிவுடைநம்பி, கு. தமிழ்வாணன், வீ. வந்தியத்தேவன், செழியன் ஆகியோர், பாவேந்தரின் பெருமை, தமிழ்ப் பற்று, தமிழ்நாட்டு விடுதலை என்னுந் தலைப்புகளில் பாடினர். பாசறையின் தலைவர், பாவலர். மு.தென்முகநம்பி அவர்கள் அம்மையார் அவர்களுக்குப் போர்வை போர்த்தியும், செயலாளர் துரை. தென்னவன் அவர்கள் பாவலரேறு எழுதிய நூறாசிரியம் என்னும் நூல் வழங்கியும் சிறப்புச் செய்தார்கள். நிகழ்ச்சி முடிவில் துணைத்தலைவர் ப. தமிழ்ச்செழியன் நன்றி தெரிவித்தார்கள்.

பிற்பகல் 3-30 மணியளவில், பன்மொழிப் புலவர் குடும்பக்கொடை வழங்கு விழா பாசறையின் தலைவர் பாவலர் தென்முகநம்பி அவர்களின் தலைமையில் தொடங்கியது. சீ. அறிவுடைநம்பி தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட, திருவாளர்கள் ப. சிவபெருமான், வீ. இளங்கோவன், சீ. அறிவுடைநம்பி, திருவாணன் ஆகியோர் உரையாற்றினார்கள். அடுத்து, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், பாசறை திரட்டி வழங்கிய உருபா 2200 (உருபா ஈராயிரத்து இருநூறை) பன்மொழிப் புலவர் அவர்களின் துணைவியார் திருவாட்டி அலர்மேல் அப்பாத்துரையார் அவர்களுக்குப் பாசறையின் சார்பில் போர்வை போர்த்தி வழங்கி, விழாச் சிறப்புரையாற்றினார்கள்.

பாவலரேறு அவர்களுக்குப் பாசறைச் செயலர் திரு. துரை. தென்னவன் அவர்கள் போர்வை போர்த்தியும், வலம்புரி இலக்கியச் சோலை சார்பாக மனோகரன் அவர்கள் துண்டு போர்த்தி உருபா 200 நன்கொடை வழங்கியும், தி.மு.க. சார்பாக க. அன்புக்குமரனும், தி.க. சார்பாக பஞ்சாபகேசனும் ஐயாவுக்குத் துண்டுகள் போர்த்தியும் சிறப்புச் செய்தார்கள். இறுதியாக இணைச்செயலர் க. அடைக்கலம் நன்றி கூற, விழா நிறைவுற்றது.

### 3. பாவாணர், பாவேந்தர்—படங்கள் திறப்பு விழா:
### —சங்கரன் கோவில்.

கடந்த 20-5-90 ஞாயிறு 7 மணியளவில், சங்கரன் கோவில் நகராட்சி வளாகத்தில், மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், பாவேந்தர் பாரதிதாசன் படங்கள் திறப்பு விழா சிறப்புற நடந்தது. நிகழ்ச்சியை, நகர மன்றத் தலைவர் திரு. அ. பழநிசாமி மற்றும் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சிக்குப் பேராசிரியர் அறிவரசன். க.மு. தலைமை தாங்கினார். நகர்மன்ற ஆணையர் செபத்தியன் முன்னிலை தாங்கினார். முதலில் பாவேந்தர் படத்தைப் பாவலர் முனைவர் தமிழன்பன் (பேரா. புதுக்கல்லூரி, சென்னை) அவர்கள் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். பின்னர் பாவாணர் படத்தைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் திறந்து வைத்துப் பேருரையாற்றினார். நகர் மன்றத் தலைவர் அ. பழநிசாமி தொடக்கத்தில் வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு நகர்மன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் பேரளவில் வந்திருந்து சிறப்புச் செய்தனர்.

### 4. இளங்கோ—பொன்மொழி நீடு வாழ்க!

கடந்த, விடைத் திங்கள் 13-(27-5-90), ஞாயிற்றுக் கிழமை, காலை 7-30 மணியளவில், சென்னை, இராயபுரம், புதுச்சூரங்குடி நாடார் உறவின் முறை, திருமண மாளிகையில், சென்னை-2 மகராசபுரம் மா. பால்பாண்டியன்—பா. சீனியம்மாள் இணையரின் திருமகன் தென்மொழியன்பர், செல்வன் இளங்கோவுக்கும், இராயபுரம் ச. தங்கவேல்-சானகியம்மாள் இணையரின் திருமகள் செல்வி. பொன்மொழிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சீரிய தலைமையில், தமிழ்த் திருமணம் இனிதே நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி கே.சி.எசு. உயர்நிலைப்பள்ளி, புரவலர் பி.தருமராசன், அரு.சங்கர் அறி.இ., பெ.பாண்டியன், எசு.எம்.பால்ராசு, காவேரி தங்கும் விடுதி அதிபர் ஏ.என்.ஆ.டி. பாண்டியன், சென்னைப் புற நகர் வணிகர் கழகத் தலைவர் கண. அப்பாதுரை, சிந்தாதிரிப்பேட்டை வணிகர் கழகத் தலைவர் கே. வி. கந்தசாமி, செயலர் டி. இரத்தினசாமி, சிந்தாதிரிப்பேட்டை நாடார் உறவின் முறை, தலைவர் எம். மாடசாமி, அய்யனார் மணக்குச்சி (ஊது பத்தி) உரிமையாளர் கே. செல்வராசு, தெய்வா மணக்குச்சி உரிமையாளர் பொன்னுசாமி ஆகியோர் நல்லுரையாற்றினர்.

## 5. தேவன்—மணிமேகலை நீடு வாழ்க!

சென்ற விடைத்திங்கள் 20 (3-6-90) ஞாயிற்றுக் கிழமை, சென்னை-19 சாத்துமாநகர் யூனியன் கார்பைடு தொழிலாளர் கழகக் கட்டிடத்தில், சாத்துமாநகர் சி. மணவாளன், அவர்கள் தலைமகன் செல்வன் ம.தேவனுக்கும், எ. சதானந்தபுரம் வெ.கெங்காதுரை அவர்களின் தலைமகள் செல்வி கெ.மணிமேகலைக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தலைமையில், தமிழ்த் திருமணம் சிறப்புற நடந்தேறியது. சட்டமன்ற உறுப்பினர் டி.கே.பழனிச்சாமி, பி.ஆறுமுகம் முன்னிலை தாங்கினர். பெ.சித்தானந்தம் வரவேற்புரையாற்றினர். திருவாளர்கள் புலவர் தமிழமுதன், மு.வரதராசன், முனைவர் பேரா. ஏ.மாரிமுத்து, மா.பொழிலன் (த.இ.பே.), சி.முத்து. குணத்தொகையன் (த.இ.பே.), ஏ.பன்னீர்ச்செல்வம் ஆகியோர் வாழ்த்துரைக்குப்பின், நா. ராசேந்திரன் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## 6. தமிழ்மணி—வெற்றிச்செல்வி(விஜி) நீடு வாழ்க!

கடந்த ஆடவை 18 (2-7-90) திங்கட் கிழமை காலை 7 மணியளவில், புதுச்சேரி, கதிர்காமம் ந.முருகேசன்—திரிபுரம் இணையரின் மகன் நெடுநாளைய தென்மொழித் தொண்டர் செல்வன் கிருட்டிணராசு என்ற ந.மு.தமிழ்மணிக்கும், கடலூர், புதுவண்டிப்பாளையம், துரை. தண்டபாணி—தமிழரசி இணையரின் மகள் த.விஜி என்ற த.வெற்றிச்செல்விக்கும், புதுவை, பாரதி திருமண மாளிகையில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சீரிய தலைமையில் தமிழ்த் திருமணம் இனிதே நடைபெற்றது.மணமக்களை வாழ்த்தி திரு. பிரபஞ்சன், நல்லுரையாற்றினர். இறுதியில் மணமகன் தமிழ்மணி நன்றி கூற, நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## 7. நெடுஞ்சேரன்—வான்மதி நீடு வாழ்க!

நிகழ்ந்த ஆடவைத் திங்கள் 24(8-7-90) ஞாயிறு காலை 6-30 மணியளவில், தொடக்க நாள் முதல் தென்மொழியின் தீவிரத் தொண்டரும், புரப்பாளரும், முதிர்ந்த பெரியார் பற்றாளரும், வ.ஆ.மாவட்ட உ.த.மு.க. செயலாளரும், கொள்கைக் கோளரியும் ஆகிய கண்ணமங்கலம் புலவர் குமர.தன்னொளியன் புலவர்—

த.கலைவாணி இணையரின், அன்பு மகனும், அருந்தமிழ்த் தொண்டரும் ஆகிய நம்பி. த. நெடுஞ்சேரன் அவர்களுக்கும், அடுக்கம் பாறை பொ.காசி—நீலாவதி இணையரின் அன்பு மகள் நங்கை கா.வான்மதிக்கும்,வேலூர், சுங்கச்சாவடி, கிருபானந்த வாரியார் திருமண மண்டபத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் இனிதே நிறைவுற நிகழ்ந்தது. தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பின் புலவர். குமரன் தன்னொளியன் வரவேற்புரையாற்றினார்...பிறகு அரியதொரு கருத்துரையாற்றித் திருமண நிகழ்வினைப் பாவலரேறு ஆற்றினார். அடுத்து மணமக்களை வாழ்த்திப் புலவர். க.மு.சுப்பிரமணியன், புலவர் அ.சுந்தரேசன். தமிழ்ப் புரவலர் முரஅரி, வ.ஆ.மாவட்ட உ.த.மு.க. தலைவர் மா.செ.தமிழ்மணி, பாவலர் இளஞ்சித்திரன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினர். இறுதியில் புலவர், த.கலைவாணி தன்னொளியன் நன்றியுரைக்குப்பின், விழா இனிதே நிறைவுற்றது.

**8 பாவேந்தர் நூற்றாண்டு விழா—வேலூர்.**

கடந்த 8-7-90 ஞாயிறு, காலை 10-30 மணியளவில் வேலூர் (வ.ஆ) வள்ளல் மாசிலாமணி மாணவர் விடுதியில் புரட்சிப் பாவேந்தர்—அம்பேத்கர்—சிங்காரவேலர் மன்றச் சார்பில், பாவேந்தர் நூற்றாண்டு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பேரா.இளங்கோ தலைமை தாங்கினார். தொடக்கத்தில், திரு. செந்தமிழ்க்கோ வரவேற்புரையாற்றினார். அடுத்து நிகழ்ந்த தலைமையுரைக்குப்பின் பாவலர் இளஞ்சித்திரன் பாவேந்தர் பற்றி ஒரு சொற்பொழிவாற்றினார். அவருக்குப் பின்னர் இறுதிச் சிறப்புரையைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார், 'பாவேந்தரும் தமிழர்களும்' என்னும் தலைப்பில் ஏறத்தாழ $1\frac{1}{2}$ மணி நேரம் ஆற்றினார். கூட்டம் அரங்கு நிறைந்திருந்து அமைதியாய்ச் செவிமடுத்தது. இறுதியில் தமிழ்இளவழகன் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.


விரைவில் வெளிவரவிருக்கிறது!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

அரிய கருத்துரைகள் அடங்கிய கருவி நூல்! தமிழீழப் போராட்டத்தின் முழுவடிவமும், போராளிகளின் முயற்சிகளும், சிங்கள, இந்திய அரசியல் சூழ்ச்சிகளும் உள்ளடங்கிய அரிய நூல்!

# தமிழீழம்

(போராளிகளும், போராட்ட முயற்சிகளும்)

1970 முதல் இதுவரை ஆசிரியர் தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றில் அவ்வப்பொழுது எழுதிய அரிய கட்டுரைப் பாடல்களின் தொகுப்பு! ஏறத்தாழ 550 பக்கங்கள் கொண்டது!

55 உருபா மதிப்புள்ள நூல்! முழுத்தொகையும் முன்னதாக அனுப்பிப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு நூல் வெளி வந்தவுடன் இலவயப் பதிவஞ்சலில் அனுப்பிவைக்கப் பெறும். முன்பே உரு. 35/-விடுத்தவர்கள், மேலும் உரு. 20/-விடுக்கவும்.

(27-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாவேந்தர் சொன்னபடி ஏதாவது...ஒன்று நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளதா? இல்லையே. சொல்வது வேறாகவும், செய்வது வேறாகவும் இருப்பது ''ஒப்போலை'' பொறுக்குவதற்காக' ஏழைகளுக்கு இலவய அரிசி போடுவதும், பின்பு இல்லை என்று மறுப்பதும்,துணி வகைகள் கொடுப்பதும் மக்களை ஏமாற்றுவதற்காக! இக் கால அரசியல் சாயம் வெளுக்கின்ற காலம் விரைவில் வரப்போகின்றது!

ஆட்சியில் தமிழ் இல்லை! கோவிலில் தமிழ் இல்லை! கல்வியில் தமிழ் இல்லை! அற மன்றத்தில் தமிழ் இல்லை! கடைத்தெருவில் தமிழ் இல்லை! இதழ்களில் தமிழ் இல்லை! பாவேந்தர் பரிசிலும் தூய தமிழ் இல்லை! இப்படியே தமிழே இல்லாத அரசுக் குழுவிடம் பாவேந்தர் கொள்கைக்கு என்ன வேலை? பாவேந்தர் கொள்கைகளைச் செயற்படுத்தாத—ஒப்புக்காக—தாளம் போடுவதை விட, குழுவிலிருந்து விலகுவதே சரி!

''தமிழை வைத்துத் தின்பார்!
தாயின் உயிரை உண்பார்!

தமிழனாக வாழ்ந்தால் போதும் தம்பி!—நல்ல
தலைமை கொள்ளும் தமிழுலகம் நம்பி''—என்ற பாவேந்தர் கொள்கைப்படி, தமிழை வைத்துத் தின்பாரிடம், தலை நிமிர்ந்து தமிழன் நான் என்று வெளியே வருவது சரியே!

---

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழில் வரும் இன்பத்தை-எடுத்தியம்ப
இலக்கிய மன்றத் தொடக்க விழா!
பாவேந்தர் புகழை நிலை நிறுத்த,
பள்ளியில் நடந்த திருவிழா!
ஐயா பாவலரேறு வருகையினால்-நாங்கள்
பகிர்ந்தோம் தமிழின் பெருமையை!
பாவேந்தன் பாடலுக்கு விளக்கம் தந்தாய்!
பகுத்தறிவுப் பகலவனின் பெருமை சொன்னாய்!
குறளாசான் வள்ளுவனின் புகழைச்சொன்ன!
பாவலரேறு ஐயா, நீர்பல்லாண்டு வாழியவே!

—தமிழேந்தல்(அ.சலீம்), சாத்தனூர்.

---


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
கொள்கைகள் அடங்கிய கிழமை இதழ்:

| | | | |
|---|---|---|---|
| தனியிதழ் | விலை | உரு. | 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | ,, | ,, | 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | ,, | ,, | 25-00 |

தொடர்புக்கு: தமிழ்நிலம், 5, அருணாசலத் தெரு, சென்னை5-

ஆனால் தாங்கள் வளம் பெறவில்லை; அன்று, மக்களுக்குப் புரியும்படி கூறினீர்களே; அ்து அரிதான செயல்; பெரும் புலமை வாய்ந்தவர்கள் கேட்க வேண்டிய பேச்சை, மக்கள் புரியும்படி தூய தமிழில் பேசினீர்களே! அதை நான் எண்ணி எண்ணி வியப்பும் மகிழ்ச்சியும் அடைகிறேன். உங்களைக் காக்க வேண்டிய மிகத் தேவையான பொறுப்பு இத் தமிழினத்திற்கு உண்டு. ஆனால் அப் பொறுப்பைச் செயல் படுத்த வேண்டுமே! அந்த அளவிற்குத் தமிழகம் இல்லையே! கவலைதான். ஏனென்றால் அன்றங்கு பேசிய ஓர் இளைஞர் 'தேவநேயப் பாவாணர் சங்கரநாயினார் கோவிலில் பிறந்தார் என்பது உண்மையாகவே (சத்தியமாகவே) இன்று தான் தெரியும்' என்று கூறும் நிலையிலேதானே தமிழகம் இருக்கிறது. பாவாணரைத் தமிழகம் அறிந்து கொள்ளத் தங்களைக் கொண்டு அறியச் செய்த அந் நகர் மன்றத் தலைவர் திரு. பழனிச்சாமி அவர்களுக்குத் தமிழர் நன்றியைத் தெரிவித்துக் கொள்வார்கள். பாவாணர் போன்று வாழ்ந்த இன்னும் எத்தனையோ தமிழறிஞர்கள் தமிழர்களுக்குத் தெரியாமல் இருக்கிறார்கள்.

அந் நிகழ்ச்சியிலிருந்து எனக்கோர் உணர்வு பிறந்துள்ளது. அது தங்களைப் பற்றியது. நீங்கள் பிறந்த ஊர், தங்களைப் பெற்றெடுத்த வணக்கத்துக்குரிய தாய் தந்தையர், உடன்பிறந்தோர் போன்ற தங்களுடைய வரலாற்றைத் தமிழகம் அறிந்து கொள்ள வேண்டும். அவ் விளைஞர் கூறியது போன்று நாங்களும் இருந்து விடலாகாது. அது பெரும் பிழையாக அமைந்து விடும். எனவே அருள் கூர்ந்து உங்களுடைய வரலாற்றுச் சுருக்கத்தைத் தென்மொழியில் எழுதும்படி பணிவோடு வேண்டுகிறேன். உங்கள் வரலாற்றைத் தாங்கள் கூறமுடியாமல் போனால், உங்களைப் பற்றி அறிய விரும்பும் பலர்க்கு நாங்களும் கூறமுடியாமல் போகும். அதனாலேயே உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்; உங்களுடைய வரலாற்றுச் சுருக்கத்தை அடுத்துவரும் தென்மொழியில் அறிவிக்கப் பணிவோடு வேண்டுகிறேன். வணக்கம். இங்ஙனம்,

எந்நாளும் தங்கள் அன்புள்ள, அதியமான், தாவழயூற்று.

○ : *1432* : நெஞ்சம் நிறைந்த ஐயா, வணக்கம்.
நலமே நாளும் மலரட்டும்.

பாவேந்தர் நூற்றாண்டு விழாவினை ஒட்டித் தமிழக அரசு 21 பாவலர்கள்-பதிப்பாளர்களுக்குப் பத்தாயிரம் உருவா பரிசு வழங்கியது என்ற செய்தியைச் செய்தித் தாள்களில் படித்த என் நண்பர்கள் சிலர், ''அந்தப் பட்டியலில் உங்கள் ஐயாவின் பெயர் இடம் பெறவில்லையே, ஏன்'' என்று கேட்டனர்! நான் அவர்களிடம் சொன்னேன். ''நீங்கள் இப்படி ஒரு கேள்வியை என்னிடம் கேட்டீர்கள். இதே கேள்வி தமிழறிந்த தமிழறிஞர்கள் நெஞ்சங்களில் எல்லாம் எழுந்திருக்கும். அதுவே எங்கள் ஐயா அவர்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசாகும்'' என்றேன்! மேலும் ''ஐயாவின் பெயர் இணைக்கப் பெற்றிருந்தால் அந்தப் பட்டியலும் பரிசும் பெருமையடைந்திருக்கும்! இணைக்காமல் விட்டதனால் ஐயாவுக்குப் பெருமை பெருகி விட்டது'' என்றேன்! நண்பர்கள் புரிந்து கொண்டனர்! புரிந்து கொள்ள வேண்டியவர்கள் என்றுதான் உணர்ந்து கொள்ளுவார்களோ? என்றும் அன்புடன் உங்கள்

—ஒடவை. தமிழ்வேந்தன், ஒட்டன்சத்திரம்.

○ : *1433* : பேரன்பு நிறை ஐயாவிற்கு! இளங்கோவன் வணங்கி வரைகின்றேன். ஐயாவின் நலனறிய அவா! ஐயா, தங்களின் 'கொய்யாக்கனி' பாவியத்தைப் பன்முறையும் சுவைத்துப் படித்தேன்; மகிழ்ந்தேன். பிஞ்சு அகவையில், கொஞ்சு தமிழில் பாவியம் செய்த வரலாற்றை, நூலின் நுழைவுரையில் நுணுகி

அறிந்தேன்; அக்கனியை உரித்து , விரித்துத் தமிழக மக்களுக்கு விருந்து வைக்க எண்ணியுள்ளேன்; ஆம்; அந் நூலைக் கோடை விடுப்பைப் பயன்படுத்தித் திறனாய்வு செய்ய எண்ணியுள்ளேன்; அணியமாய் நிற்கின்றேன்; அந் நூலை வேறு யாரேனும் ஆய்ந்திருப்பினும் தெரிவிக்கவும்; அவர்கள் எவ்வாறு நோக்கி, நுணுகி நுண்மையை நவின்றுள்ளனர் என்பதையறிய அது துணை செய்யும்; எல்லாவற்றிற்கும் மேலாக ஐயாவின் அன்பு நிறை வாழ்த்தினையும் ஒப்புதலையும் வேண்டி நிற்கின்றேன்; அன்புடன்;

—மு; இளங்கோவன், இல.இ இடைக்கட்டு,

(ஆசிரியர் குறிப்பு: 'கொய்யாக்கனி'யைச் சென்னைப் பல்கலைக் கழகம் முதுகலை, சிறப்புத் தமிழ் மாணவர்களுக்குப் பாடமாக வைத்திருக்கின்றது; இதுவரை அதன் திறனாய்வை எழுதி நூல் வெளி வரவில்லை. நல்லன செய்வதற்கு எம் வாழ்த்து என்றும் உண்டு.

...ஆசிரியர்;)

O : *1434* : எங்கள் பாவேந்தர்; பாவலர் ஐயா அவர்களுக்கு! நெஞ்சம் சுரக்கும் கண்ணீர், செந்நீர் மிகுந்த தமிழ் மண்ணின் மாந்தரின் நாயமான, இனமான மொழிமான, தன்மானப் பங்கை இந்தியாவில் நமக்குக் கிடைக்க, எவ்வளவு சிறிய, சின்னஞ்சிறு இடத்தில் அமர்ந்துக் கொண்டு, நெற்றி வெயர்வை, உடம்பு வெயர்வை சிந்திக் கொண்டு, எழுதி வாழும் சிந்தனையாளராகிய உங்களைக் காணும்போது, மாந்தத் தன்மையுடைய அரசியல். குமுகாயச் சிற்பிகள் என்று தான் நம் எழுத்துகளைச் செயலுக்குக் கொண்டுவரக் காத்திருக்கிறார்களோ? 'இது தான் தமிழ்நாடு' இவர்தான் தமிழர்' என்பதை எழுதிக் கொண்டே நூறு அகவை வரை வாழுங்கள்! அன்பன்,

—செ; தானியல், காட்டுப்பாடி.

O : *1435* : பெரும் மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். எங்கள் பள்ளிக்கு நீங்கள் வந்தது முதல் தங்கள் நினைவால் நீங்காத நிழலாக உள்ளோம்; நீங்கள் சிறப்புரை ஆற்றிய மறுநாளே சாத்தனூரில் வரலாறு காணாத மழை பொழிந்தது; நான் நினைக்கிறேன். தாங்கள் ஆற்றிய சொற்பொழிவும், தமிழின் மேல் உள்ள பற்றும் வானத்தில் உள்ள மேகத்தின் கண்பட்டு, அது மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்ததா என்றெல்லாம் நினைக்கிறேன்; எனக்குத் தமிழின் மேல் எப்பொழுதும் பற்று உண்டு. ஆனால் தங்களின் சொற்பொழிவின் பால் என்னை முழுமையாகத் தமிழுக்காக ஒப்படைத்து விட்டேன். என் மனம் மாற்றத்திற்குக் காரணமான தங்களை என்றும் மறக்க மாட்டேன்.

ஐயா, எனக்குப் பாடல் எழுதும் திறனும் ஓரளவுக்கு உண்டு; நான் உங்களுக்காக ஒரு பாடல் எழுதுகிறேன்; அதில் தவறு இருப்பின் மன்னிக்கவும். எனக்கு மேல் மேலும் ஊக்கம் அளிக்கும் படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்;

நித்தம், நித்தம் தமிழ்ப்பேச்சு!
அதுவே தங்களின் உயிர்மூச்சு!
தமிழ் மொழிக்கு இன்னலென்று வந்துவிட்டால்,
தனக்கு வந்த இன்னலென்றே கருதுகின்றாய்!
தமிழ்ப் பற்றுமிகு பாவலரேறு ஐயாவே!
நின் தமிழால் மகிழ்கின்றேன் மிகையாகவே!
சங்கத்தமிழ் புகழ் எடுத்துரைக்க
சாத்தனூரில் நடந்த பொன்விழா!

(தொடர்ச்சி உள்ளே 32-ஆம் பக்கம்)